Registered as a NewsPaper

விலை: ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் –12 | இலவசப் பிரதி

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆவணி–13 | 29–08–2004 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை –193



S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில்
அசல் 22 கரட்
தங்க நகைகளை
உங்கள்
விருப்பத்திற்கேற்ப
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
(சி-9957) T.P: 024-222 4247

# ராணுவத்திற்குத் தகவல் வழங்கியவர் கொழும்பில் நேற்று சுட்டுக்கொலை!

## பலாத்காரமாக வீட்டினுள் புகுந்து சூடு

(கொழும்பு)

**ராணுவத்திற்குத் தகவல் கொடுத்து வந்த திஸ்ஸவீரசிங்கம் துஸ்யந்தகுமார் என்ற இளைஞன் கொழும்புப் புறநகர்ப் பகுதியில் வைத்து நேற்றுக்காலை சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். சுரேஷ் என்று அழைக்கப்படும் 31 வயதுடைய இந்நபர் இராணுவத்திற்குக் கடந்த பலவருடங்களாக பல தகவல்களை வழங்கிவந்தவர் என இராணுவப் பேச்சாளர் கேணல் சுமேதபெரேரா கூறியுள்ளார்.**

கொக்கட்டிச்சோலையைச் சேர்ந்த இவர் நேற்று அதிகாலை 4.30 மணியளவில் தெஹிவளைக்கு அண்மையிலுள்ள பெப்பிலியாவில் சிபிலியானவீதி பொரலஸ் கமுவில் அமைந்துள்ள 92ஆம் இலக்க இல்லத்தில் உறங்கிக்கொண்டிருந்தவேளை பலாத்காரமாகஇவரதுவீட்டை உடைத்து உள்புகுந்தவர்கள் 4பேர் அவரைச் சுட்டுக் கொன்றதாகவும் இதன் போது அவரது மனைவி காயங்கள் எதுவுமின்றி தப்பித்துக் கொண்டதாகவும், அத்துடன் துப்பாக்கிச் சூடு நடத்தியோர் அவ்விடத்தைவிட்டு நீங்கும் முன் கைக்குண்டொன்றையும் வெடிக்க வைத்துச் சென்றதாகவும் அவர் கூறினார்.

இவர் இராணுவப்புலனாய்வுப் பிரிவின் நீண்டதூரம்உட்சென்று தாக்கும் அணியில் உறுப்பினராக இருந்தவர் என்று கூறிய போதிலும் இதுதொடர்பாக உத்தியோகபூர்வமான தகவல்கள் எதுவும் வெளியிடவில்லை. இதுவரை இக்கொலைச்சம்பவம் தொடர்பாக எவரும் கைது செய்யப்படவில்லையென்றும் இந்தக் கொலைக்குப் பின்னால் இருந்தவர்களைக் கண்டுபிடிப்பதற்காக விசேட பொலிஸ் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (32)



## சுயாதீன தேர்தல் குழு நியமனங்களை சனாதிபதி சந்திரிகா தாமதப்படுத்தி வருகிறார்

### சபாநாயகர் லொக்கு பண்டார தெரிவிப்பு

(கொழும்பு)

சுயாதீன தேர்தல் ஆணைகுழு நியமனங்களை சனாதிபதி தாமதப்படுத்தி வருவதாக பாராளுமன்ற சபாநாயகர் லொக்குபண்டார கூறியுள்ளார்.

அரசியல் அமைப்பு சபையானது சுயாதீன தேர்தல் ஆணைக்குழு நியமனத்தை தாமதப்படுத்தி வருவதாக தேர்தல் ஆணையாளர் தயாநந்த திஸநாயக்க முன்வைத்த குற்றச்சாட்டுத் தொடர்பில் விளக்கமளிக்கும் போதே சபாநாயகர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## புதுக்குடியிருப்பில் வாகனவிபத்து "கைஎஸ்" வாகனம் பலத்தசேதம்

முல்லைத்தீவில் இருந்து புதுக்குடியிருப்பு நோக்கி வந்த 'கைஎஸ்' வாகனம் ஒன்று உழவு இயந்திரத்துடன் மோதியதில் அவ்வாகனம் பலத்தசேதமடைந்தது. நேற்று பி.ப 3.00 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றது.முல்லை- புதுக்குடியிருப்பு பிரதான வீதியில் வந்து கொண்டிருந்த " கைஎஸ்" வாகனத்தின் மீது (12ஆம் பக்கம் பார்க்க)



படம்:- தவரட்ணம்

## வவுனியா வீதி விபத்தில் இளைஞர் ஒருவர் பலி

வவுனியா ஓமந்தைப் பகுதியில் நேற்று இடம்பெற்ற வீதி விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் முற்பகல் பத்துமணியளவில் இடம்பெற்றுள்ளது.ஓமந்தையில் இருந்து வவுனியா நோக்கிச்சென்று கொண்டிருந்த மிதிவண்டி மீது எதிரே வந்த வாகனம் மோதிய போதே இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

இதன் போது மிதிவண்டியில் பயணித்த இளைஞர். சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் உயிரிழந்தவர் வவுனியாவைச் சேர்ந்த18அகவையுடைய பாலகிருஸ்ணன் கிருஸ்ணகுமார் என இனங்காணப்பட்டுள்ளார். (32)

## ஊர்திகளைப் பயன்படுத்துவோர் கவனத்திற் கொள்ளவும்

(அலுவலக செய்தியாளர்)

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் ஊர்திகளைப் பாவனைகுட்படுத்தி வருபவர்கள் பின்வரும் நடைமுறைகளைக் கைக்கொள்ளும் வண்ணம் மோட்டார் ஊர்திப் பதிவுப்பகுதி போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினர் வேண்டியுள்ளனர்.

இதன் பிரகாரம் மேற்படி பகுதிக்குள் ஊர்திகளைப் பயன்படுத்தும் போது ஊர்தியின் முன்பின் பக்கங்களில் ஊர்தி இலக்கம் பொருத்தப்பட்டிருப்பதுடன் நடப்பு ஆண்டிற்கான வரி அட்டையினை தம்வசம் வைத்திருக்க வேண்டும் என்பதனை தெரிவித்துள்ளதுடன்

(12ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு

மட்டக்களப்பு மாவடி ஓடைப் பகுதியில் கடந்த 26ஆம் திகதி தேசவிரோதக்குழுவினரின் தாக்குதலில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார். கப்டன் லீந்தனன் (வாலசிங்கம் புவிராஜ், (12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர்களுக்கு நியாயமான தீர்வை ஜே.வி.பி ஒரு போதும் அனுமதிக்காது

### யாழ்.ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம்.

" ஜே.வி.பி ஒரு சிங்கள இனவாதக்கட்சி. அது என்றுமே தமிழ் மக்களுக்கு ஒரு நியாயமான தீர்வினைத் தர அனுமதிக்கப் போவதில்லை. இதனை இலங்கை அரசு புரிந்து கொள்ள வேண்டும். இனிமேலாவது ஜே.வி.பி போன்ற இனவாதக் கூட்டுக்களைக் கைவிட்டு சமாதான நடவடிக்கைகளை இதயசுத்தியுடன் முன்னெடுக்க வரவேண்டுமென" அழைப்பு விடுத்துள்ளார் யாழ்.ஆயர் அதிவணக்கத்துக்குரிய தோமஸ். சவுந்தரநாயகம் அடிகளார்.

குறிப்பாக விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாக வரைவு தொடர்பாகப் பொய்ப்பிரச்சாரங்கள் தென்னிலங்கையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாக வரைவு பிரிந்து செல்வதற்கான ஒரு வழியென சில சக்திகள் அங்கு பொய்ப்பிரச்சாரம் செய்து வருகின்றன.

இதனை முறியடிப்பதற்கேதுவாக இடைக்கால நிர்வாக வரைவு தொடர்பாகத் தென்னிலங்கை மக்களிடையே உரிய விளக்கங்களை அளிப்பதற்கான நடவடிக்கைகளை விடுதலைப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## கட்டாய மதமாற்றத் தடைச்சட்டம் கொண்டுவரக் கூடியது மோதல் மட்டுமே

### கிறிஸ்தவ அமைப்புக்கள் இணையம் எச்சரிக்கை

"தற்போது கொண்டுவரப்படவுள்ள கட்டாய மதமாற்றத்தடைச் சட்டத்தை எந்தவிதத்தில் கொண்டு வந்தாலும் அல்லது சட்டப்படி தீர்மானிக்கப்பட்டாலும் நடக்கப்போவது பெரும்பான்மையினரான பௌத்தர்களுக்கும், சிறுபான்மையின மதங்களைச் சேர்ந்தவர்களிடையேயான மோதலே" என சர்வதேச கிறிஸ்தவ அமைப்புக்களின் 'இலங்கைக்கான இணையம் எச்சரித்துள்ளது.

"ஹெல உறுமய" அமைப்பினால் கொண்டுவரப்பட்வுள்ள கட்டாய மதமாற்றத்தடைச் சட்டத்தை விலக்கிக்கொள்ளக்கோரி யாழ்.நகரப்பகுதியில் நேற்றுப் பிற்பகல் மேற்கொள்ளப்பட்ட கண்டனப் பேரணியின் முடிவில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பிரதிநிதிகளிடம் கையளித்த மகஜரிலேயே மேற்கண்டவாறு எச்சரிக்கப்பட்டுள்ளது.

இலங்கையிலுள்ள சிறுமதங்களை ஹெல உறுமயவின் பௌத்த குருமாரிடமிருந்து பாதுகாப்பை உறுதிசெய்யும்படி கோரும் இம்மகஜரைப் பேரணி ஏற்பாட்டாளர்களிடம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலக இணைப்பதிகாரி ஆர்.பி.றுவன் சந்திரசேகர பெற் றுக்கொண்டார்.

யாழ்.நகரப்பகுதியிலிருந்து

(12ஆம் பக்கம் பார்க்க)

# சாவு அறிவித்தல்

## திரு. தம்பிராசா மகேந்திரன்

காயத்திரி மியூசிக் சென்ரர், உரிமையாளர்,
(கிளிநொச்சி-பரந்தன்)
அக்காய் மியூசிக் சென்ரர், உரிமையாளர்,
(திருகோணமலை)

கிளிநொச்சி (குமரபுரம்–பரந்தன்)யில் வசித்தவருமான திரு. தம்பிராசா மகேந்திரன் 27.08.2004 அன்று காலமானார். அன்னார் பரமேஸ்வரியின் அன்புக்கணவரும், காயத்திரி, கீதாஞ்சலி, கார்த்திகா, சித்திராஅரவிந்த், ஆகியோரின் அன்பு தந்தையுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 29.08.2004. 11.00 மணி அளவில் இல:. 63B உக்கிளான்குளம்–வவுனியா என்னும் முகவரியில் நடைபெற்று வவுனியாதட்சனாகுளம் இந்து மயானத்தில் பூதவுடல் நல்லடக்கம்செய்யப்படும்.

இல:-63B,
உக்கிளான்குளம்,
வவுனியா.

தகவல்
மனைவி,பிள்ளைகள்.

(5014)

## மூவர் தடுப்புக்காவலில்

(கொழும்பு)

கடந்த யூலை மாதம் 31ஆம் திகதி கொள்ளுப்பிட்டிப்பகுதியில் இடம்பெற்ற புளொட் மோகனின் கொலை தொடர்பாக மூன்று நபர்கள் தொடர்ந்தும் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.


### கணினி வகுப்புக்கள்

விசேட ஆங்கில, சிங்கள, கணினி வேக தட்டெழுத்து வகுப்புக்கள் நடைபெறுகின்றன. பாடசாலை மாணவர்களுக்கு கணினிப்பாட நெறி மாதாந்தம் 500/=

தொடர்பிற்கு
"டேற்றாபேசிக்",
இரணைமடுச்சந்தி,
(ராங்வியூ ஹோட்டல் அருகாமை)
கிளிநொச்சி.. (4989)


# சாவு அறிவித்தல்

## சரவணமுத்து வியாழம்மா


புதுக்குடியிருப்பு 4 ஆம் வட்டாரத்தை வாழ்விடமாக கொண்ட அமரர் சரவணமுத்து வியாழம்மா 28-08-2004 ஆம் திகதி நேற்று காலமாகியுள்ளார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 29.08.2004 ஆம் திகதி அவரின் இல்லத்தில் நடைபெற்று நல்லடக்கத்திற்காக புதுக்குடியிருப்பு இந்துமயானத்திற்கு பி.ப 2.00 மணிக்கு பூதவுடல் எடுத்துச்செல்லப்படும் இவ் அறிவித்தலை உற்றார்,உறவினர், அன்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

(சி.10328)

தகவல்,
ச.நாகரத்தினம்(மகன்),
பிரதிக்கல்விப் பணிப்பாளர்,
முல்லைக்கல்வி வலயம்.

# சாவுச் செய்தியால் துயரில் ஆழ்ந்துள்ளோம்



## அமரர் இராசேந்திரம் வரதராசா அவர்கள்

தமிழீழக்கல்வி மேம்பாட்டுப் பேரவையின் உறுப்பினரும் ஓய்வுபெற்ற. வவுனியா வடக்குக் கல்விக்கோட்ட அலுவலருமான இராசேந்திரம் வரத ராசா அவர்களது திடீர் சாவு வன்னிக்கல்விச் சமூகத்துக்குப் பேரதிர்ச்சியாக அமைந்துவிட்டது. நெருக்கடியான காலத்தில் சிங்கள இராணுவப்படை நடவடிக்கைகளின் போது வவுனியா வடக்கு கல்விக் கோட்டப் பள்ளிகள் அனைத்தும் பேரழிவுகளை எதிர்கொண்டு முற்றாக இடம்பெயர்ந்தபோது அனைத்துப் பள்ளிகளையும் முல்லை மாவட்டத்தில் இயங்கவைப்பதற்கு அயராது உழைத்ததையும் இடம்பெயர்ந்த காலத்தில் அரச ஊதியம் கிடைப்பதில் காலத்தாழ்வு ஏற்பட்டபோது இடருற்ற வவுனியாவடக்குக் கோட்ட ஆசிரியர்களுக்கும், பள்ளி முதல்வர்களுக்கும் உடனடியாக மாற்று வழியில் பணம்கிடைக்க உதவியதை வவுனியா வடக்கு கோட்ட ஆசிரியர்கள், பள்ளி முதல்வர்கள் யாரும் மறந்து விடமாட்டார்கள். அன்னாரின் திடீர் மறைவினால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கும் வன்னி கல்விச்சமூகத்திற்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தமிழீழக் கல்விக்கழகம்,
தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவை,
தமிழீழ மாணவர் அமைப்பு.

(சி.10329)

# ௯ ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில் 11 * 08 * 1976

தாயக மண்ணில் 29 * 08 * 1995



## கப்டன் தணிகை வேல்

### சிவசாமி சத்தியரூபன்

விடுதலை உணர்வோடுவீறு கொண்
டெழுந்த எங்கள் செல்வமே
தணிகைவேலா
மண்ணிலே நீ விதையாகி ஒன்பது
வருடங்களானதையா
ஒன்பது வருடங்களானாலும்
எங்கள் மனதைவிட்டு
உன்நினைவு எட்டிச்செல்லவில்லை
தணிகைவேலன் என்று அன்போடு
அழைக்கப்பெற்றவனே
மல்லாகத்தில் நேரடிச் சமரில்
நீ சரியவில்லை சரித்திரமாகிவிட்டாய்.

28,விக்டர் எழுச்சிக் கிராமம்,
(மாதிரிக்கிராமம்)
பல்லவராயன்கட்டு.

நினைவால் வாடும்
குடும்பத்தினர்

(5012)


**NATIONAL CONSTRUCTION ASSOCIATION OF SRILANKA (NCASL- NORTHERN BRANCH**
**FIELD OFFICER, "LEARN - TO - EARN" VOCATIONAL TRAINING PILOT PROJECT (3 POSITIONS)**

**The duties and responsibifities of the Field officer are as follows:**

1. The Learn-to-Earn training-for- employment pilot project is a 4 months Initiarive to be Implemented From September-December 2004. Managed by NCASL's Northerm Branch, the project will combine class room and on-the-Job training in basic carpentry and masonry in jaffna, kilinochchi and Vavuniya.
2. In each of these 3 cities, a field officer will be the principal site manager for Learn-to-Earn training. he/she will have lead responsibility for supervising project implementa tion, including:
   Maintaining continuous liaison with project stakeholders:
   Fiscal and logistical management of the project resources: and
   Troubleshooning to resolveioperational problems so as to keep project progress on sched ule and on budget.
3. The Field officer's duty station will be largely on-the-road, traveling between classroom and on-the-Job Training sites. the officer will Report directly to NCASL's project mana ger.

**The successful candidate should possess these qualifications:**

1. We seek a sri Lankan with extensive (5 or more years') experience in the con struction induatry, preferably in the North. Experience with vocational training programmes is desirable, as is a combination of private/ public-sector work experience.
2. Demonstraed problem-solving and consensus-building skills willbe essential.
3. excellent spoken and written tamil language skills are re quired. En glish language skills are considered an asset.
4. WORD and Excel Software skills.
5. Flexibility to travel with in the Northern region is required.

**Duty Station.** Unit office of NCASL- Jaffna, Kilinochchi and Vavuniya (one position in each location). please rank your willingness to work in jaffna/ kilinochchi/Vavuinya.
**Duration: Full** time (40 hours/week) for 4 months with the possibility of extension, starting early September 2004.
**Remuneration** a basic salary of Rs.12,000/= per month, plus a traveling allowamcd of Rs.3,000/=
Candidates are invited to send a CV containing educational/professionl qualifications and work experience with the names of 2 Unrelated referees and contact telephone number during working hours, with in 7 days of this advertisement. applications should be forwarded to: informaton manager,chamber of commerce and industries of yarlpanam no.17,agrarjan service lane, nallur,jaffna (சி.10147)


# ஈராக் மீதான நிலைமையைக் கணிப்பதில் தவறிழைத்துவிட்டேன் ஒப்புக்கொள்கிறார்-புஷ்



ஈராக்கின் நஜாப் நகரில் அழிக்கப்பட்ட கட்டடங்களின் முன் நிற்கும் அமெரிக்கப் படைவீரர் ஒருவர்.

(நியூயோர்க்)


**"ஈராக்கில் சதாம்ஹுசைன் மீதான வெற்றிக்குப் பிறகான நிலைமையைக் கணிப்பதில் தவறு செய்து விட்டேன்'' என்று அமெரிக்க சனாதிபதி புஷ் ஒப்புக்கொண்டுள்ளார்.**



ஈராக்போர் பற்றி அமெரிக்கப் பத்திரிகை ஒன்றுக்கு புஷ் அளித்த செவ்வியில் அவர் கூறியதாவது;

சதாம் ஹுசைன் மீதான வெற்றியால் ஏற்பட்ட பக்கவிளைவுதான் 17 மாதகால ஆயுதம் தாங்கிய கிளர்ச்சி. இந்த இடத்தில் நான் தவறாகக் கணக்குப் போட்டுவிட்டேன். சதாம் ஹுசைனை அகற்றிய பிறகு ஏற்படப் போகும் நிலைமை என்னவாக இருக்கும் என்பதில் என் கணிப்பு தவறிவிட்டது. நிலைமைக்கு ஏற்ப நாங்கள் சரிசெய்து கொண்டு போகிறோம்.

ஈராக் போர் தொடங்கியது முதல் இதுவரை 969 அமெரிக்க வீரர்கள் இறந்துள்ளனர். அவர்களில் 828 பேர் கடந்த ஆண்டு ஏப்ரல் 30 ஆம் திகதிக்குப் பிறகு பலியானார்கள். 6 ஆயிரத்து 690 இராணுவ வீரர்கள் காயமடைந்துள்ளனர். அணு ஆயுதம் தயாரிக்க முற்பட்டு இருக்கும் வடகொரியாவுக்கும், ஈரானுக்கும் அவசரப்பட்டு கெடு எதுவும் விதிக்கப் போவது இல்லை என்றும் புஷ் கூறினார். ராஜதந்திர ரீதியில் அந்த நாடுகள் வற்புறுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.



நஜாப் இமாம் மலி புனிதத் தலப்பகுதியில் இருந்து திரும்புவோரைச் சோதனையிடும் ஈராக்கியப் பொலிசார்.

## ஜோர்ஜ் புஷ்ஷிற்கு எதிர்ப்புத் தெரிவித்து நியூஜோர்க்கில் துவிச்சக்கரவண்டிப் போராட்டம்

(வோஷிங்டன்)

அமெரிக்க சனாதிபதி தேர்தலில் குடியரசுக்கட்சி சார்பில் ஜோர்ஜ்புஷ் மீண்டும் நிறுத்தப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நியூயோர்க்கில் துவிச்சக்கர வண்டி மறியல் போராட்டம் நடத்தப்பட்டுள்ளது. இதில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றுள்ளனர்.

அமெரிக்க சனாதிபதித் தேர்தல் எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ளது. இதில் கிளின்டனின் சனநாயக் கட்சி சார்பில் ஜோன்ஹரி போட்டியிடுகின்றார்.

ஜோர்ச் புஷ்ஷே கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளரை அறிவிப்பதற்கான மாநாடு நியூயோர்க்கில் நாளை தொடங்கி மூன்று நாட்கள் நடைபெறவுள்ளது. ஜோர்ஷ் புஷ்சே வேட்பாளராக அறிவிக்கப்படுகிறது. உறுதியாகியுள்ள நிலையில் அவரை நிறுத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மாநாடு நடைபெறவுள்ள இடத்திற்கு அருகே ஆயிரக்கணக்கானோர் தமது துவிச்சக்கரவண்டிகளை வீதியில் நிறுத்திப் போராட்டம் நடத்தியுள்ளனர்.

இப்போராட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்த பலரை ஆர்ப்பாட்டக்காரர்கள் தாக்கியதில் பதற்றம் ஏற்பட்டதுடன், பொலிசார் ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் பலரைக் கைதும் செய்தனர்.

இதனால் நாளைமுதல் நடைபெறவுள்ள மாநாட்டிற்கு பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. சுமார் 50 ஆயிரம்பேர் பங்குகொள்ளும் இம் மாநாட்டிற்கு நேற்று முதல் சுமார் 20 ஆயிரம் பொலிசார் குவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மசூதி மீது பீரங்கித்தாக்குதல் ஈராக்கில் 27 பேர் உயிரிழப்பு

ஈராக்கில் கு.்.பா நகரில் உள்ள புகழ்பெற்ற மசூதி மீது நடத்தப்பட்ட பீரங்கித் தாக்குதலில் 27 பேர் உயிரிழந்துள்ளனர். 63பேர் காயமடைந்துள்ளனர்.

இதேவேளை வன்முறையால் பாதிக்கப்பட்ட நஜாப் நகரை நோக்கி ஊர்வலமாகச் சென்ற ஷியா முஸ்லிம்கள் மீது அடையாளம் தெரியாத நபர் கண்மூடித்தனமாகச் சுட்டதில் ஒருவர் உயிரிழந்தார். இதையடுத்து, ஊர்வலத்தினர் தங்களது உயிரைக் காத்துக்கொள்வதற்காக அங்குமிங்கும் ஓடினர்.

உயிரிழந்தவர்களின் உடல்கள் ஷியா பிரிவுத் தலைவர் முக்ததா அல்-சதாருக்கு பெருமளவு ஆதரவாளர்கள் உள்ள மசூதியைச் சுற்றிலும் கிடத்தப்பட்டிருந்தன. காயமடைந்தவர்கள் அருகாமையில் உள்ள மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டனர். 2பீரங்கிக் குண்டுகள் மசூதியின் வாயில் பகுதியிலும் மற்றொரு குண்டு சுற்றுச்சுவர் மீதும் பட்டு வெடித்ததாக அல்-சதாரின் உதவியாளர் ஒருவர் கூறினார். சுற்றுச்சுவர் பாதிக்கப்படவில்லை. பீரங்கிக் குண்டுகளால் தாக்கியவர்கள் யார் என்பது தெரியவில்லை.

## அமெரிக்கப் படையினர் தீவிர தாக்குதல் இமாம் மலி பள்ளிவாசலை இழந்தனர் ஷியா போராளிகள்

(பாக்தாத்)

ஈராக்கில் தொடர்ச்சியான அமெரிக்கப்படையினரின் தாக்குதலையடுத்து ஷியா முஸ்லிம் போராளிகள் இமாம் மலி பள்ளிவாசலை இழந்துள்ளனர்.


ஆயிரக்கணக்கான யாத்திரிகர்கள் வந்து செல்லும் பள்ளிவாசலான நஜாப்பின் இமாம் மலி பள்ளிவாசல் தீவிரவாதிகளின் பிடியிலிருந்து மீட்கப்பட்டுள்ளதாக அமெரிக்கப்படையினர் கூறியுள்ளனர்.

ஷியா முஸ்லிம் போராளிகள் பள்ளிவாசலை இழந்து அங்கிருந்து வெளியேறியதையடுத்து ஈராக்கிய ஆன்மீகத் தலைவர்கள் இமாம் மலி பள்ளி வாசலை மூடிவிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை நஜாப்பில் தொடர்ச்சியான தாக்குதலால் 110 ஈராக்கியர்கள் கொல்லப்பட்டுள்ளனர். 500 ஈராக்கியர்கள் படுகாயமடைந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



நியூயோர்க் நகரில் துவிச்சக்கரவண்டி ஆர்ப்பாட்டக்காரர்கள் சாலை மறிப்பில் ஈடுபட்டிருந்தபோது நியூயோர்க் நகரப் பொலிசாரால் ஒரு ஆர்ப்பாட்டக்காரர் கைது செய்யப்பட்டு பேருந்தினுள் கொண்டு செல்லப்படுகின்றார்.



புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட பாகிஸ்தான் புதிய பிரதமர் செளகத் சுசிஸ் (இடம்) முன்னைய பிரதமர் ஜபருல்லா ஜமாலி (வலம்)யினால் புதிய பிரதமர் தெரிவு செய்யப்பட்டதன் பின் வாழ்த்தப்படுகிறார்.

## அமெரிக்காவில் குடியேற முயன்ற கியூபா நாட்டவர் அறுவர் கைது

கியூபாவிலிருந்து சட்ட விரோதமாக அமெரிக்காவினுள் குடிபெயர முயன்ற ஆறு பேர் டெக்சாஸ் மாநிலத்தில் நேற்று முன்தினம் கைது செய்யுப்பட்டுள்ளனர்.

கடந்த இரண்டு மாதத்திற்கு முன்பு கியூபாவில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் தமது வதிவிட வசதிகளை இழந்துள்ளதாகவும், அதனாலேயே அமெரிக்காவினுள் குடியேற வந்ததாகவும் கூறியுள்ளனர்.

இதேவேளை கியூபாவிலிருந்து இடம்பெயர்வோர் வழமையாக புளோரிடா மாநிலத்திற்கே குடிபெயர்வது வழமை. இது 144 கிலோ மீற்றர் பரப்பளவு கொண்ட மாநிலமாகும்.

கைப்பற்றப்பட்டுள்ள இந்தப் படகு சுமார் 1600 கிலோ மீற்றர் தூரத்தைக் கடந்து டெஸ்சாஸ் மாநிலத்தையடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்தப்படகில் கருவாடு இருந்துள்ளதாகவும் டெஸ்சாஸ் மாநிலப் பொலிசார் கூறியுள்ளனர்.

## மசூதிகளில் குண்டு வெடிப்பு 18 பேர் படுகாயமடைந்தனர்

மராட்டிய மாநிலத்தின் மத்திய பகுதியில் உள்ள ஜல்னா மற்றும் பூர்னா நகரங்களில் உள்ள. மசூதிகளில் நேற்று குண்டுகள் வெடித்தன. ஜல்னா மசூதியில், மோட்டார் சைக்கிளில் வந்த மர்மமனிதர்கள் நாட்டு வெடிகுண்டுகளை வீசியதில் 5 பேர் படுகாயம் அடைந்தனர். இதேபோல் பூர்னா மசூதியில் குண்டுகள் வீசப்பட்டதில் 13 பேர் படுகாயம் அடைந்தனர்.

இதையொட்டி, ஜல்னா நகரில் ஊரடங்கு உத்தரவும், பூர்னாவில் பொலிஸ் தடை உத்தரவும் பிறப்பிக்கப்பட்டு பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டு உள்ளன.

## வரட்சியை சமாளிக்க நதிகளை இணைப்பதே ஒரேவழி

### -இந்திய சனாதிபதி அப்துல்கலாம்

தமிழகம் உள்ளிட்ட தென் மாநிலங்களில் நிலவும் வரட்சியைச் சமாளிக்க நதிகளை இணைப்பதுதான் ஒரேவழி என்று சனாதிபதி அப்துல்கலாம் கூறியுள்ளார்.

கச்சதீவுப்பகுதியில் மீன்பிடிக்க உரிமை பெற்றுத்தர வேண்டும் எனும் மீனவர்களின் கோரிக்கையினை பரிசீலிப்பதாகவும் அவர் தமிழ்நாட்டிற்கு இரண்டு நாட்கள் பயணமாகச் சென்ற போது நேற்று முன்தினம் இதனைத் தெரிவித்துள்ளார்.



கடந்த ஒரு கிழமையாகத் தொடர்ந்து லொறி உரிமையாளர்களின் வேலை நிறுத்தம் அரசுடன் ஒரு உடன்படிக்கை எட்டப்பட்டு முடிவிற்கு வந்துள்ளது.

# பச்சை மரங்கள் வெட்டுவதற்கு வவு.மாவட்டத்தில் முற்றாகத் தடை

## வவு.மாவட்ட அரசியற்துறையினர் அறிவிப்பு

**வவுனியா மாவட்டத்தில் பச்சை மரங்கள் வெட்டப்படுவது முற்றாகத் தடை செய்யப்பட்டிருப்பதாக வவுனியா மாவட்ட அரசியற்துறை பொறுப்பாளர் தி.ஞானவேல் தெரிவித்துள்ளார். அண்மை நாட்களாக அதிகளவில் பச்சை மரங்கள் வெட்டப்படுவதாக தொடர்ச்சியான முறைப்பாடுகள் கிடைத்ததற்கு அமைவாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.**

தீவிரமாக மரங்கள் வெட்டப்படுவதன் காரணமாக எதிர் காலத்தில் அதிகளவான விளைவுகள் ஏற்படும் என்றும், அத்துடன் வனவள அதிகாரிகளிடமோ, அல்லது திணைக்களத்திடமோ அனுமதி பெறாமல் இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டுக் கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதன் காரணத்தினால் வவுனியா அரசியற் துறையினரும், வனவளப்பிரிவினரும் இணைந்து இந்த நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். இது தொடர்பாக வவுனியா மாவட்டத்தின் அனைத்து இடங்களிலும் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (21)

# அருகிவரும் கடல்வாழ் உயிரினங்களை அழிப்பதை உடன் நிறுத்தக் கோரிக்கை

கடல்வாழ் உயிரினங்களில் அருகிவரும் உயிரினங்களான கடல் ஓங்கில் (டொல்பின்), கடற்பன்றி, கடல்ஆமை போன்ற வற்றைப்பிடித்து அழித்து உணவுக்குப் பயன்படுத்துவதை உடன் நிறுத்துமாறு முல்லை. மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரும், முல்லை. மாவட்ட நீரியல்வளத் துறைப் பிரதிப் பணிப்பாளர் இராதாகிருஷ்ணனும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

டொல்பின் வகை மீன் இனம் படகு திசைமாறினாலும், மீனவர்களுக்கு வழிகாட்டியாகக் கடலில் வலம்வரும் இவ் உயிரினத்தை பெருமளவாக வளர்க்கவேண்டும் என்றும் கடலில் சுருக்குவலை, ஒரு இளைவலை, னைமற்வெடி போன்றவற்றால் மீன்பிடிப்பதையும் தடைசெய்யுமாறும் நன்னீர் மீன்பிடியில் 85 மில்லி மீற்றருக்கு மேற்பட்ட வலைகளைப் பய'ன் படுத்தப்பட வேண்டாம் எனவும், இவ் நடைமுறை 26.08.2004 இல் இருந்து இருக்குமெனவும் மீறுவோர் மீது நடவடிக்கை எடுக்கப் படுமெனவும் முல்லை. மாவட்ட நீரியல் வளத்துறை பிரதிப் பணிப்பாளர் இராதகிருஷ்ணன் தெரிவித்தார். (20)

# கரைதுறைப்பற்றில் பல கிராமங்கள் கடும்வரட்சியால் பாதிப்பு

கடும் வரட்சியினால் முல்லைமாவட்டத்தில் பல கிராமங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.இவர்களுக்கான நீர் வழங்குவதற்கு பிரதேச உதவி அரச அதிபர்கள் நடவடிக்கை மேற்கொண்டுவருகின்றனர். இவற்றில் கரைதுறைப்பற்றில் நாயாறு, கணுக்கேணி, பூதன்வலயக்கிராமங்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன.

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் ஆனந்தபுரம், மல்லிகைத்தீவு, மந்துவில், வேணாவில், கோம்பாவில் ஆகிய கிராமங்கள் பெரும் பாதிப்புக்களுக்குள்ளாகியுள்ளன எனவும் துணுக்காய்ப் பிரதேசத்திலும் பல கிராமங்கள் நீரின்றிப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அந்தந்தப் பகுதி உதவி அரச அதிபர்கள் அரச அதிபருக்கு அத்தியாவசியச் சேவைக் குழுக் கலந்துரையாடலில் தெரிவித்தனர். (20)

# மாவீரர் தின நிகழ்வுகளை முன்னெடுக்க வவுனியாவில் சிறப்புக்குழு அமைப்பு

(செட்டிகுளம்)

வவுனியா மாவட்டத்தில் இவ்வாண்டு மாவீரர் நாள் நிகழ்வுகளை சிறப்பாக முன்னெடுப்பது தொடர்பாக வவுனியா அரசியல் துறையினர் 15 பேரைக் கொண்ட குழு ஒன்றினை அமைத்துள்ளனர். இந்த நிகழ்வு வவுனியா அரசியல் துறை காரியாலயத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தி.ஞானவேல், மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் அலை ஆகியோர் சிறப்புரைகளினை ஆற்றியுள்ளனர். வவுனியா மாவட்டத்தின் மாவீரர்நாள் நிகழ்வுகள் அனைத்தும் இந்தக் குழு உறுப்பினர்களாலேயே இம்முறை முன்னெடுக்கப்படும் என்று வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் தி.ஞானவேல் தெரிவித்தார். இந்த நிகழ்வில் தேசிய எழுச்சிப் பேரவையின் உறுப்பினர்கள் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் பிரதிநிதிகள் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் மாவட்டத்தின் அபிவிருத்தியில் நலன் கொண்ட வர்களும் கலந்து கொண்டதாகவும் இந்தக் குழுவுக்கு சபாநாதன் தலைவராக நியமிக்கப்பட்டிருப் பதாகவும் வவுனியா அரசியல் துறையினர் தெரிவிக்கின்றனர். (21)

# வீதிப் போக்குவரத்து நடைமுறைகள் கண்காணிக்க காவல்துறை விசேட நடவடிக்கை

(அலுவலக செய்தியாளர்)

வீதி விபத்துக்களை தடுக்கும் முகமாக தமிழீழ காவல் துறையினர் பல விசேட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.நேற்று முன்தினம ஏ9 வீதியால் மிதிவண்டிகளில் பக்கம் பக்கமாக பயணித்த 100 இற்கு மேற்பட்டவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுத்ததோடு குற்றப் பணமும் அறவீடு செய்யப்பட்டது. அத்தோடு சமிக்ஞைகளை சரியாக கையாளாத சாரதிகள் மீதும் நடவடிக்கைகளை எடுத்து வருவதோடு உந்துருளிகளில் மூவர் பயணிப்பதை நீதிமன்ற விசாரணைகளுக்குட்படுத்தியும் வருகின்றனர். அத்தோடு வாகனக் கொள்ளளவுகளுக்கு அதிகமாக பொருட்களை ஏற்றுதல், இரவு வேளைகளில் வாகன விளக்குகளின்றி பயணிப்போர் விளக்குகளின் சைகைகளை சரியாக பயன்படுத்தாதோர் எனப் பலவாறு வீதிப் போக்குவரத்து விதிகளை மீறுவோர் மீது நடவடிக்கைகள் எடுத்தும் வருகின்றனர்.



எனவே தமிழீழத்தின் எந்தப் பகுதிகளிலும் போக்குவரத்து விதிகளிலிருந்து விலகி செயற்படும் எந்த நபரும் உடனடியாக தமிழீழ காவல் துறையினரின் கடும் நடவடிக்கைக்கு ஆளாக வேண்டிவரும் எனத் தமிழீழ காவல் துறையின் வீதிப் போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவுப் பொறுப்பாளர் சி.சிவகுமார் அவர்கள் தெரிவித்துள்ளார். (ச,தீ)

# பதியப்படாத பிறப்புகள் பதிவு செய்ய பல நடவடிக்கைகள்

பதியப்படாத பிறப்புக்களை பதிவு செய்யவென பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக வடக்குவலய உதவிப் பதிவாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

வவுனியா, மன்னார், மாவட்டங்களில் மேலதிக மாவட்டப் பதிவாளர்களுச்கு உரிய பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் கிராம சேவையாளர்கள், பதிவாளர்கள் ஆகியோருக்கும் இத்தகைய பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் அறிவித்துள்ளார். அத்துடன் முல்லைத்தீவு மாவட்ட மேலதிக மாவட்டப்பதிவாளரும் குறித்தவிடயம் தொடர்பாக தேவையான நடவடிக் கைகளை எடுத்து வருவதாகவும் இது தொடர்பில் தேவையிருப்பின் உடனடியாக சம்பந்தப்பட்ட மாவட்ட செயலகத்தில் மேலதிக மாவட்டப் பதிவாளரின் கவனத்திற்குக்கொண்டுவரலாம் எனவும் அவர் அறியத்தந்துள்ளார்.

# அக்கராயன் பிரதேச முன்பள்ளிகளின் கல்வி மேம்பாட்டுக் கண்காட்சி

(அலுவலக செய்தியாளர்)

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசரணையுடன் முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையத்தின் ஒழுங்கமைப்பில் அக்கராயன் பிரதேச முன்பள்ளிகளின் கண்காட்சி விழா ஸ்கந்தபுரம் இல1 பாடசாலையில் நடைபெற்றது.

அக்கராயன் பிரதேச முன்பள்ளிக் கல்விமேம்பாட்டு நிலையத் தலைவர் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் மங்கல விளக்கினை கிளிநொச்சி மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் தலைவர் கணேசபிள்ளை, அக்கராயன் அபிவிருத்தி நிறுவனத் தலைவர் கிருண்ஷ்பிள்ளை, ஆரம்பப் பிள்ளைப்பருவ அபிவிருத்திபிரிவு இணைப்பாளர் இ.ரேணுகா ஆகியோர் ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக் கொடியினை தேசிய எழுச்சிப்பேரவையைச் சேர்ந்த சபாரத்தினம் ஏற்றி வைத்தார்.

அடுத்து நிறுவன மற்றும் முன்பள்ளிக் கொடி ஏற்றலினைத் தொடர்ந்து கண்காட்சி மண்டபத்தினை முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் சி.சிவநாதன் ஏற்றி வைத்தார். ஆசியுரையினை அ.சா.நி.தலைவர் கணேசபிள்ளையும், சிறப்புரையினை செல்வி இ.ரேணுகாவும் நிகழ்த்தினார்.

பெருந்திரளான மக்கள் கண்காட்சியினை கண்டுகளித்தமை குறிப்பிடத்தக்கது. (சோ,கு)

# கட்டாக்காலி நாய்களின் தொல்லை கரைதுறைப்பற்றில் அதிகரிப்பு

(முள்ளியவளை)

கரைதுறைப்பற்றுப் பிரதேசத்தில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்து வருகின்றது.

மேற்படி பகுதியில் முள்ளியவளை, தண்ணீரூற்று, வற்றாப்பளை, முல்லைத்தீவு, வட்டுவாகால், குமுளமுனை, அளம்பில், போன்ற பகுதிகளிலுள்ள பொதுச்சந்தைகளிலும் பிரதான வீதிகளிலும் பெருமளவான நாய்கள் பகல் வேளைகளில் வியாபாரிகளுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் தொல்லை கொடுத்துவருவதை அவதானிக்க முடிகின்றது அத்தோடு குட்டை,புண் நோய் வாய்ப்பட்டநாய்களும் அலைந்து திரிகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

# மன்னாரில் கடும் வரட்சியினால் குடிநீருக்குப் பெரும் தட்டுப்பாடு

மன்னாரில் தற்சமயம் கடும் வரட்சி நிலவுவதால் மன்னார் மக்கள் குடிநீரிற்கு மிகவும் கஷ்டப்படுகின்றார்கள் முக்கியமாக நல்ல செழிப்புள்ள பகுதிகளான உயிலங்கும், செட்டிகுளம், விஜயராயன்குளம், புதுக்கமம் போன்ற இடங்களிலுள்ள கிணறுகளில் 15 அடி, 18அடி நீர் நிற்கக்கூடிய காலப்பகுதியில் தற்சமயம் 2அடி, 3அடி தண்ணீர் மட்டுமே உள்ளது. இதேவேளையில் மன்னார் சாந்திபுரம், பள்ளிமுனை ஆகிய கிராமங்களில் கடும் வரட்சியினால் குடிநீருக்கு தட்டுப்பாடு நிலவுவதன் காரணமாக அக்கிராமங்களிற்கு பவுசர் மூலம் குடிநீர் விநியோகம் செய்வதற்காக மன்னார் பிரதேச செயலாளர் R.வலதீஸ்வரன் அவர்கள் ஒழுங்குகளை செய்து வருகிறார். (மி)

## இம்மாதம் நடைபெறாது

முல்லை மாவட்ட நுண்கலைக்கல்லூரியால் மாதாந்தம் நடத்தப்பட்டுவரும் முழுநிலா நாள் கலையரங்கு தவிர்க்க முடியாத காரணத்தால் இம் மாதம் நடைபெறமாட்டாது என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

# -கிளிநொச்சி மாவட்டத்தில்- காலங்கடந்த பிறப்பு, இறப்புகளை பதிவு செய்ய இடம் பெயர் சேவை

கிளிநொச்சி மாவட்டத்தில் பதிவு செய்யப்படாதுள்ள காலங்கடந்த பிறப்பு,இறப்பு பதிவுகளை மேற்கொள்ளும் பொருட்டு இடம்பெயர் சேவை ஒன்றை சகல உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் கீழ்க்காணும் திகதிகளில் நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே இதுவரையும் பதிவு செய்யாதவர்கள் பதிவுகளை மேற்கொள்ள தங்கள் பகுதிக்கிராம அலுவலரிடம் தொடர்பு கொண்டு பயன்பெறுமாறும் மேலதிக மாவட்டப் பதிவாளர் கேட்டுள்ளார். பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவு-முழங்காவில்- 11.9.2004, ஆலங்கேணி-12.9.2004. பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவு பிரதேச செயலகம்-17.9.2004 கரைச்சி(கிளிநொச்சி) உதவி அ.அ. பிரிவு- இரமாநாதபுரம் மகாவித்தியாலயம்-18.9.2004, உருத்திரபுரம் மகாவித்தியாலயம்-19.9.2004, கண்டாவளை உதவிஅ.அ.பிரிவு - தர்மபுரம் மகாவித்தியாலயம்-25.9.2004, பரந்தன் குமரபுரம் மகாவித்தியாலயம் - 26.9.2004,

இவ் ஒழுங்கில் பதிவுகள் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. (12)

# நோர்வேயை சிறிலங்கா அரசு அணைக்க முயல்கிறதா? துரத்தவிளைகிறதா?

நோர்வேஅரசின் மத்தியஸ்துவம் குறித்தும், நோர்வே தலைமையிலான ஸ்கண்டிநேவிய யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு குறித்தும் அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன? அதாவது, இவ் இரண்டின் செயற்பாட்டிலும் அரசாங்கம் திருப்தி கொண்டுள்ளதா? இல்லையா? அன்றி இவ்விரண்டின் செயற்பாட்டையும் அரசியலாக்க முற்படுகின்றதா?

இதனை மறுவளமாகக் கூறுவதானால், சமாதான முயற்சிகள் தொடர்பாக, இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை தொடர்பாக அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன? யுத்த நிறுத்தம் தொடர்பாக அரசாங்கத்தின் முடிவு என்ன? என்பது குறித்த கேள்விகளுக்கு அரசாங்கம் பதில் அளிக்க வேண்டியதானதொரு சூழ்நிலை இன்று ஏற்பட்டுள்ளது.

சமாதானப் பேச்சுவார்த்தைகள், யுத்த நிறுத்தம் என்பன தொடர்பாக மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணியின் நிலைப்பாடானது ஆரம்பம் முதலே குழப்பகரமாக இருந்திருப்பினும் கடந்த வாரத்தில் இவ்விடயம் குறித்து அரசாங்கத் தரப்பின் அறிவிப்புக்கள் இவ்விரண்டினதும் செயற்பாடுகள் குறித்து அரசாங்கம் கொண்டுள்ள நிலைப்பாடு என்ற கேள்வியை தீவிரமாக எழுப்புபவையாக வுள்ளன.

இவ்வாரத் தொடக்கத்தில் பாதுகாப்புச் செயலாளர் சிறில் ஹேரத், கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் டொன் புறுவ் ஹெவ்டேயுடன் பேச்சு நடத்திய வேளையில், விடுதலைப்புலிகள் மீது சர்வதேச ரீதியில் அழுத்தம் தரத்தக்க வகையில் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அறிக்கைகள் அமைதல் வேண்டும் என்ற ரீதியில் கோரிக்கையை முன்வைத்தார்.

சுருக்கமாகக் கூறுவதானால், விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்த உடன்பாட்டிற்கு மாறான வகையிலும், சமாதான முயற்சிகளுக்கும் ஊறுவிளைவிக்கும் வகையிலும் நடந்து கொள்வதாகக் கண்காணிப்புக்குழுவின் அறிக்கைகள் அமைதல் வேண்டும்



என்பதாக சிறிலங்கா அரச தரப்பின் எதிர்பார்கை இருந்தது.

ஆனால், கண்காணிப்புக்குழு அரசாங்கத்தின் விருப்பிற்கு ஏற்றதான நிலைப்பாட்டை மேற்கொள்ளுதல் என்பது சாத்தியப்பாடானதொன்றாக இல்லை. ஏனெனில், கள நிலைமை அவ்வாறானதாக இல்லாததோடு மட்டுமல்ல, அது கண்காணிப்புக் குழுவின் நம்பகம் குறித்தும் கேள்வி எழ வைக்கக் கூடியதாகும். ஆகையினால், அரசாங்கத்தின் கோரிக்கைக்கு முழு அளவிலானதொரு ஆதரவு என்பது சாத்தியப்பாடானதொன்றாக இருக்கவில்லை.

இவ்வாறாகக் கண்காணிப்புக் குழுவை ஒரு தலைப்பட்சமான முடிவிற்கு அரச நிர்



வாகத்தினர் தூண்ட முற்பட்ட வேளையில், ஆளும் கட்சி அரசியல்வாதிகளின் அறிக்கைகளோ நோர்வே அரசையும், யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவையும் வெகுவாகச் சீண்டுவதாகவும், குற்றம் சாட்டுபவையாகவும் இருந்தன.

நோர்வேயின் சமாதான முயற்சிகள் தொடர்பாக ஏற்கனவே, அபிப்பிராய பேதம் கொண்டிருந்தவரான பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறிவிக்கிரமநாயக்க இறுதியாக, போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு தனது பணியைச் சரிவரச் செய்யத் தவறியமை காரணமாக, இலங்கை இரண்டாகப் பிளவுபட்டுள்ளது எனக் குற்றம் சாட்டும் நிலைவரைசென்றார்.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சரின் இக்குற்றச்சாட்டானது, சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கண்காணிப்புக்குழுவிற்கு விடுத்த கோரிக்கைக்கு எதிர் மாறானதாக கண்காணிப்புக் குழுவை விடுதலைப்புலிகளுக்கு சாதகமானதொரு நிலைப்பாட்டுடன் செயற்படுவதான குற்றச்சாட்டைக் கொண்டதாக இருந்தது.

இதேவேளை, பிரதிப் பாதுகாப்பு அமைச்சரின் கூற்றுக்களை ஆதரிப்பது போன்று அமைச்சரவைப் பேச்சாளரும், சிரேஷ்ட அமைச்சர்களில் ஒருவருமான மங்கள சமரவீரவின் கூற்றுக்களும் அமைந்தன. ஊடகவியலாளர் மத்தியில் மூன்று தினங்களுக்கு முன் பேசிய, அமைச்சர் மங்கள சமரவீர, "இலங்கையில் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் நிலையில் தளம்பல் ஏற்பட்டுள்ளதா? எனக் கேள்வி எழுப்பினார்.

அதாவது, பிரதிப் பாதுகாப்பு அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளரும் கண்காணிப்புக் குழு தனது பணிகளைத் திறம்படச் செய்யவில்லை என்ற ரீதியில் தமது குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளனர்.. ஆனால், இக்குற்றச்சாட்டுக்கள் தமது விருப்பிற்கு / அணுகுமுறைக்கு ஏற்றவிதத்தில் கண்காணிப்புக்குழுச் செயற்படவில்லை என்பதனால் ஏற்பட்ட விரக்தியின் வெளிப்பாடே ஒழிய வேறு எதுவுமில்லை.

கண்காணிப்புக்குழுவினர் குறிப்பிடுவது போன்று அமைதி வழிமுறையை முன்னெடுத்துச் செல்ல கிழக்கின் நிலைமை சாதகமானதாக இல்லை என்பது ஏற்றுக்கொள்ளத்தக்கதே. ஆனால், அரசாங்கத் தரப்போ இத்தகைய நிலைமை தோற்றம் பெறுவதற்கு விடுதலைப்புலிகளே காரணம் என்ற வகையிலான அறிக்கைகளை கண்காணிப்புக் குழுவினரிடம் இருந்து எதிர் பார்த்து நிற்கின்றது.

ஆனால், கண்காணிப்புக்குழுவின் இத்தகைய அறிக்கைகளைத் தயாரிப்பதற்கான ஆதாரங்கள் இல்லை என்பது மட்டுமல்ல, கிழக்கில் இன்றைய நிலைக்குச் சிறிலங்கா அரச தரப்பின் நடவடிக்கைகளே அடிப் படையாக அமைந் தன என்பதுமே உண்மை நிலை யாகும். இதனைக் கண்காணிப்புக் குழுத் தரப்பும், நோர்வேத் தரப்பும் ஓரளவேனும் உணர்ந்து கொண்டுள்ளனர் என்றே கூறலாம்.

இதன் வெளிப்பாடாகவே "புலிகள் மீதான தாக்குதல்களுக்கு தமிழ்க் குழுக்களைப் பயன்படுத்துவதை சிறிலங்கா அரசாங்கம் நிறுத்த வேண்டும் என்ற நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சூல் ஹெய்மின் அறிவுறுத்தல் அமைந்துள்ளது.

இத்தகையதொரு சூழ்நிலையில், சிறிலங்கா, ஆட்சியாளர்களின் நிலைப்பாட்டிற்கும் - சமாதான முயற்சிகள் மற்றும் யுத்த நிறுத்தம் ஆகியவற்றை முன்னெடுத்தலுக்கும் நோர்வே அரசினதும், யுத்த நிறுத்த க்ண்காணிப்புக் குழுவின் கருத்துக்களுக்கு இடையில் தெளிவானவேறுபாடு உள்ளமையே இன்று கண்காணிப்புக்குழு மீதும், நோர்வே மீதும் சிங்கள ஆட்சியாளர் கள் சீற்றம் கொள்ளக் காரணமாகும்.



ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தைப் பொறுத்து, யுத்தத்தைத் தொடங்குவதா? சமாதானப் பேச்சுவார்த்தை களை ஆரம்பிப் பதா? என்ற குழப் பம் ஆரம்பம் முதலே உண்டு. வேறுவிதமாகக் கூறுவதானால், கூட்டணி அர சாங்கத்தில் யுத் தத்திற்கு ஆதர வான சக்திகள் நிரம்பவே உண்டு. ஆனால், யுத்தத்தை நடத்துவதற்குச் சாத கமான சூழ்நிலை இல்லை என்பது அதன் விருப்பிற்கு ஏற்றதாக இல்லை.

இந்நிலையில்தான், யுத்தத்திற்கான சூழ்நிலை எவ்வாறேனும் உருவாக்கிவிட அது முற்பட்டு நிற்கின்றது. இதன் அடிப்படையிலேயே கிழக்கில் வன்முறையைத் தூண்டவும், அதற்கான பழியினை விடுதலைப்புலிகள் மீது சுமத்துவதற்கும் அரசாங்கம் முற்பட்டு நிற்கின்றது.

ஆனால், இவ்விடயம், அரசாங்கத் தரப்பினருக்கு எதிர்பார்த்த பயனைக் கொடுக்கவில்லை. குறிப்பாக, விடுதலைப்புலிகளுக்குள் பிளவை உண்டாக்கி, மோதலகளை அதிகரிப்பதன் மூலம் புலிகள் யுத்த நிறுத்தத்திற்கு ஊறு விளைவிப்பதான குற்றச்சாட்டின் அடிப்படையில் யுத்தத்தை ஆரம்பிப்பது,

அடுத்ததாக, புலிகள் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக்கான நகல் திட்டத்தை நிராகரிப்பதோடு, தமது திட்டத்தின் அடிப்படையில் புலிகள் பேச்சுவார்த்தைக்கு முன்வராத பட்சத்தில் புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைகளைக் குழப்புவதாகக் கூறிச் சர்வதேச நாடுகளின் ஆதரவுடன் யுத்தத்தை ஆரம்பிப்பது.என்பவையே அரசாங்கத்தின் குறிக்கோளாகும்.

ஆனால், அரசாங்கத் தரப்பின் இத்தகைய அணுகுமுறை வெற்றி பெறவில்லை. இதனால் ஆட்சியாளர் தரப்பில் ஏமாற்றம் ஏற்பட்டது என்றுகூடக்கூறலாம். இதன்விளைவே, "விடுதலைப்புலிகள் தாக்கினால் திரும்பத் தாக்குங்கள் என்ற இராணுவத் தளபதியின் அறிவிப்பும்" "பொறுமையின் எல்லைக்கு அரசு தள்ளப்பட்டாலும், தொடர்ந்து பொறுமை காக்கவே அரசு விரும்புகின்றது. சமாதான முயற்சிகளை ஆரம்பிப்பதற்காக பொறுமை பேண அரசு உறுதி பூண்டுள்ளது" என்ற சிரேஷ்ட அமைச்சர் மங்கள சமரவீரவின் கூற்றுக்களும் ஆகும்.

அதாவது, அரசாங்கத் தரப்பில் சமாதான முயற்சிகளை முன்னெடுக்கவும் முடியவில்லை. யுத்தத்தைத் தொடங்கவும் முடியவில்லை என்பதே இன்றைய நிலையாகவுள்ளது. சமாதான முயற்சிகளை முன்னெடுக்க ஆட்சியாளர்கள் இடையில் இணக்கப்பாடு இல்லை. யுத்தத்தை முன்னெடுக்க உள்நாட்டு, வெளிநாட்டு அரசியல் மற்றும் பொருளாதாரச் சூழ்நிலையும் சாதகமானதாக இல்லை.

இந்நிலையில் தான், அரசாங்கம் ஒரு வேளை, சமாதான முயற்சிகளையும், நோர்வேயின் மத்தியஸ்துவத்தையும் வரவேற்கின்றது. இன்னொருவேளை, சமாதான முயற்சிகளுக்கு முட்டுக்கட்டையும், யுத்த நிறுத்தக் கண்காணிப்பாளர்களையும் காட்டமாகச் சாடுகின்றது.

ஆனால், ஆட்சியாளர்களின் இத்தகைய போக்கு சமாதானத்திற்கு ஆதரவானதாகவும், நாட்டிற்கு நன்மை பயற்பதாகவும் எப்பொழுதுமே இருக்கப்போதில்லை. இதனைச் சர்வதேச நாடுகள் ஓரளவு புரிந்து கொண்டுள்ளன என்றே கொள்ளமுடியும். அவ்வாறு இல்லாதுவிடில், அரசிற்கு ஆதரவான நிலைப்பாடுகளை அவர்கள் விரைவிலேயே எடுக்கத் தொடங்கியிருப்பர்.

**-ஜெயராஜ்**

## ஆலயத் திருவிழாவுக்குச் சென்ற மாணவர்களை கடற்படையினர் திருப்பி அனுப்பினர்

பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலய ஐந்தாம் திரு விழாவுக்கு இரண்டு பேருந்துகளில் சென்ற மாணவர்களை, நேற்று முன்தினம் பொன்னாலை சந்தியில் நின்ற கடற்படையினர் திருப்பியனுப்பியுள்ளனர். அத்துடன் ஆலயத்திற்குச் செல்லும் பக்தர்கள் மீதான் கெடுபிடிகளையும் கடற்படையினர் அதிகரித்துள்ளனர். குறிப்பிட்ட மாணவர்களை ஆலயத்திற்குச் செல்லவிடாமல் கடற்படை திருப்பியனுப்பிய போது, அப்பகுதிக்கு மூன்று பேருந்துகளில் வந்த சிங்கள மாணவர்களைக் கடற்படையினர் அந்தப் பகுதிக்குச் செல்ல அனுமதித்துள்ளனர்.

## தங்கச்சங்கிலி கண்டெடுப்பு

கிளிநொச்சி திருநகர் வீதியில் மரஅரிவுக் காலைக்கு அருகாமையில் தங்கச் சங்கிலி ஒன்று கண்டெடுக்கப்பட்டு கனகபுரம் நிதித்துறை கணக்காய்வுப்பகுதி நடுவப் பணிமனையில் உள்ளது. உரியவர்கள் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

## கைக்குண்டுடன் கைதானவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவு

மட்டக்களப்பு நகர்ப்புறப்பகுதியில் கைக்குண்டுடன் காணப்பட்ட இராணுவப்புலனாய்வுப் பிரிவுடன் இணைந்து செயற்படும் சுப்பிரமணியம் யோகநாதனைத் தடுப்புக் காவலில் வைக்கும்படி மட்டக்களப்பு நீதிபதி நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளார். மிக உயர் பாதுகாப்பு வலயமான புதூரில் வைத்து ஒரு பொலிஸ் ரோந்துப் படையினரால் கடந்த வியாழன் இவர் கைது செய்யப்பட்டார். இவர் மீதான விசாரணைகள் மட்டக்களப்புக் குற்றவியல்பிரிவு அதிகாரி சோமசிறியினால் மேற்கொள்ளப்பட்டு வருவதாகப் பொலிசார் கூறினர்.



# தொண்டைமானாறு ஸ்ரீ செ

# தேர்த் திருவிழாச் சிறு


எமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்,
ஆதரவாளர்கள்அனைவருக்கும் தேரேறிவரும்
செல்வச்சந்நிதி முருகனருள் கிடைக்கப்
பிரார்த்திக்கின்றோம்.

புதிய அம்பிகா மல்ரி சென்ரர்
பிரதான சாலை, நெல்லியடி, கரவெட்டி.
T.P: 0212263139 FAX:0212263571
(சி-10000) E-mail:- loshan@slt net.lk

தலைவர்
பணிப்பாளர்கள், பணியாளர்கள்.
வலி–கிழக்கு வடபகுதி
பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம்
அச்சுவேலி.
(சி-10134) T.P- 021-2225988, 0094-0602212382

நெல்லைக் குமரன் ரேடர்ஸ்
நெல்லை சில்க்
பிரதான சாலை, நெல்லியடி.
(சி-10135) T.P- 021-2263207


ஹப்பி ரெக்ஸ்ரைல்
இல: 110, பிரதானசாலை,
நெல்லியடி.
(சி-10136)

உங்கள் தேவைகள் எதுவாகினும்
நிறைவேற்றக்காத்திருக்கின்றோம்.
லவ்லி கூல்பார்
லவ்லி ஒலி ஒளிப்பதிவுக்கூடம்
லவ்லி பஸ் ஆசனப் பதிவகம்
லவ்லி சைனீஸ் ரெஸ்ரோரன்ட்
பிரதான சாலை, நெல்லியடி.
T.P- 021-2263219 (சி-10137)


## எந்நீதியும் தருவான் செல்வச்ச

ஈழத்திருநாட்டின்வடபகுதியில் தொண்டைமானாற்றங்கரையில் அமைந்துள்ள செல்வச்சந்நிதி ஆலயம் -மிகப்பெரும் வரலாற்றுச் சிறப்பைத் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது. ஈழத்தின் முருகன் ஆலயங்களில் கதிர்காமம், மண்டூர், செல்வச்சந்நிதி ஆகிய மூன்று முருகன் ஆலயங்களும், ஏனைய முருகன் ஆலயங்களில் இருந்தும் வித்தியாசமானவை. இம் மூன்று ஆலயங்களிலும்"வேல்"வழிபாடு முக்கியத்துவம் பெற்றுள்ள துடன் இங்கு பிராமணரல்லாத ஜீவனோபாயத் தொழில் புரிபவர்களே பூசகர்களாக இருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

ஈழத்தின் கிடைப்படத்தில் இம் மூன்றின் அமைவிடத்தையும் இணைத்தால் அது முக்கோண வடிவத்தில்



அமைந்து "வேல்" வடிவத்தை நினைவூட்டுகின்றது.

இன்று வடபகுதியில் உள்ள ஆலயங்கள் வேதாகமச் செல்வாக்கினால் ஆகம மரபுகளுக்கு உட்பட்டபோதும், பண்டைய முருக வழிபாடான "வேல்" வழிபாட்டின் முக்கியத்துவத்தினை எடுத்துக் காட்டும் வகையில், ஆகமம் சாராத மரபுகளுக்குட்பட்ட வழிபாட்டுப் பாரம்பரியங்களைக் கொண்ட ஒரு தலமாகச் செல்வச்சந்நிதி ஆலயம் விளங்குகின்றது.

16ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கேயராலும் பின்பு ஒல்லாந்தராலும் அழிக்கப்பட்ட இவ் ஆலயம் ஒல்லாந்தர் காலப் பிற்பகுதியில் மருதர் கதிர்காமர் என்ற முருக பக்தரால் மீண்டும் அமைக்கப்பட்டது. முருகப்பெருமான் ஆற்றங்கரையில் ஆடு மேய்க்கும் சிறுவனாகக் காட்சி கொடுத்து "நான் அறுபத்து மூவருடன் இங்கு வந்து எழுந்தருளி இருக்கின்றேன். எனக்கு இவ்விடத்தில் ஆலயம் அமைத்து 65 ஆலம் இலைகளில் அமுதுபடைத்து என்னை வழிபட்டு வருபவர்களுக்கு அவ்வமுதை வழங்கு வீராக" எனக் கூறினார். இதைக்கேட்டு ஆச்சரியமடைந்த கதிர்காமர் "எனக்கு மந்திரமோ பூசை முறைகளோ தெரியாது நான் எவ்வாறு தங்களுக்கு பூசை செய்வேன்? என்று கூற அவரைக் கணப் பொழுதில் கதிர்காமம் அழைத்துச் சென்று, அங்கு நடைபெறும் பூசை முறைகளைக் காட்டி, வாய்கட்டிப் பூசை செய்யுமாறுகூறி வேல் ஒன்றையும் வழங்கினார் என ஆலய புராணம் கூறுகின்றது.

செல்வச்சந்நிதி ஆலயத்தின் தல விருட்சமாக பூவரச மரம் அமைந்துள்ளது. இன்று இவ்வாலயம் அமைந்துள்ள இடத்தில் இருந்த ஒரு பூவரசமர நிழலிலேயே வீரபாகு தேவர் வேல் ஒன்றை வைத்துச் சந்திக்காலப் பூசை செய்தார். ஐராவசு

என்ற முனிவரு
சமாதியானார்,
காட்சி கொடுத்
கொள்ளப்படுகிற
தல விருட்சமாக

அன்னதான
முருகப் பெருமா
தீர்த்தம் நடை
அற்றுப்போகும்
வள்ளிக்கொடி
ஆரம்பமாகிறது.

செல்
மூலஸ்தானத்தில்
திருவிழாக்களின்
வீதிவலம் வருகி
தாக்கவந்த யா
அது வேலாக ம
முகமாக வெ
காணலா

செல்வ
அமைந்திருப்ப
பல்லாயிரக்கண
கடன்களை நி
ஆற்றங்கரை
ஆற்றங்கரையே
பூசை செய்ததி
பெயர் கொண்

1986ஆ
சிறிலங்கா இரா
பின்பு சந்நிதிய
வீதியுலா வந்து
இம்முறை பு
பெருமானுக்கா
குரிய சித்திரத்
வெள்ளோட்ட
சித்திரத் தேர்களி
வரும் அ கா

இவ்வருட
16-08-2004 அ
ஞாயிற்றுக்கிழ
காலை தீர்த்தத்
முருகன் அருள
தீர்த்து - சகல
சமாதானமாக
முருகன் அருள




வைஷ்ணவி
நகைப்பூங்கா
VYSNAVY
Nagai Poonka
அசல் 22 கரட் தங்க நகைகளை,
கைதேர்ந்த தொழில் வல்லுனர்களால்
மனதைக் கவர்ந்த டிசைன்களில்
செய்து பெற்றுக்கொள்ளலாம்
பிரதானசாலை, நெல்லியடி.
(சி-10138)



அன்னதானக் கந்தனாகி அடியவரின் பசிபோக்கி ஆற்றங்கரை வேலனாகி
ஆறாத துயரம் தீர்க்கும்சந்நிதிக் கந்தனருள் அனைவருக்கும்
கிடைத்திட பிரார்த்திக்கின்றோம்.
தலைவர்
பணிப்பாளர்கள், பணியாளர்கள்.
கட்டைவேலி – நெல்லியடி
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
நாம்வழங்கும் சேவைகள்
தொலைபேசி 021-226 3263
- நுகர்ச்சிச் சேவை
- கிராமிய வங்கிச் சேவை
- கட்டடப்பகுதிச் சேவை
- ஒப்பந்தப் பகுதிச் சேவை
- வெதுப்பகம்
- நூல்நிலையம்
- கலாச்சார பெருமன்றம்
- புலமைப்பரிசில் வழங்கள்
- பாலர் பாடசாலை

மேலும் பல சேவைகளினூடாக எமது மக்கள்
பயன் பெறும் வகையில் நாம் செயற்படக்காத்திருக்கின்றோம்.
(சி-10139)



# ல்வச்சந்நிதி முருகன் ஆலயம்

# பிதழ்–29–08–2004

## ந்தி முருகன்

பூவரசமர நிழலிலேயே தவம் செய்து கப் பெருமானும் கதிர்காமருக்கு முதலில் ஒரு பூவரச மரத்தின் கீழேயே எனக் இதனால் பூவரசமரமே செல்வச்சந்நிதியின் ருந்து வருகிறது.

கந்தன் என அன்பாக அழைக்கப்படும் கு ஆவணி மாதத்தில் வரும் பூரணையில் பும். அதற்கு முன்வரும் அமாவாசை ாத்தில் கோவில் கிணற்றுக்கு அருகே ளப்பதோடு கொடியேற்றத் திருவிழா


சந்நிதியில் முருகப் பெருமான் ல் உருவிலேயே எழுந்தருளி இருக்கிறார். பாதும் வேலவன் வேல் உருவிலேயே இவ்வேலில் சிகண்டி முனிவர் தன்னைத் கு வெற்றிலையை கிள்ளி வீசியபோது பானையைத்தாக்கியதை எடுத்துக்காட்டும் பின்நுனி பதிக்கப்பட்டிருப்பதை இன்றும்

நிதி ஆலயம் கல்லோடை என்ற பகுதியில் ால் கல்லோடைக் கந்தன் எனவும், பக்தர்கள் காவடி எடுத்து தமது நேர்த்திக் வேற்றுவதால் காவடிக்கந்தன் எனவும் எழுந்தருளி அருள்பாலிப்பதால் எனவும் வீரபாகு தேவர் சந்திக்காலப் சந்நிதியான் எனவும், பக்தர்களால் பல நிதி முருகன் அழைக்கப்படுகின்றார்.

ஆண்டு ஏப்பிரல் மாதம் 21ஆம் திகதி பத்தினரால் சித்திரத் தேர் எரிக்கப்பட்ட கட்டுத் தேரிலேயே இதுவரை காலமும் பவர்களுக்குகாட்சி கொடுத்தார். ஆனால் ாக நிர்மாணிக்கப்பட்ட முருகப் த்திரத் தேரும், விநாயகப் பெருமானுக் ம் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற வினைத் தொடர்ந்து இன்று இருபுதிய ருகப் பெருமானும், விநாயகரும் வீதியுலா இடம் பெறும்.

வழமைபோல் வருடாந்த மகோற்சவம் ஆரம்பமாகி இன்று 29-08-2004 ர்த்திருவிழாவும் நாளை திங்கட்கிழமை ழாவும் நடைபெறவுள்ளது. செல்வச்சந்நிதி - தமிழ் பேசும் மக்களின் இன்னல்கள் ட்சத்துடனும் சகல உரிமையும் பெற்று தெய்வீக அருளை வளர்க்க சந்நிதி பிப்பாராக.

சிறப்பிதழாக்கம் - காரையூரான்



1986ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 21ஆம் திகதி சிறிலங்கா இராணுவத்தினரால் எரித்து சாம்பலாக்கப்பட்ட சித்திரத் தேர்.

### வேலன் மணிக்குரல் வெல்லும்!

செல்வச் சந்நிதி மாமணி ஓசை
சேர்க திசை எட்டும்!
கொல்லத் திரியும் கொடும்பகை வெறியர்
கொட்டம் அடங்கட்டும்!
வெல்லப் பிறந்தான் வேலன் மணிக்குரல்
வெற்றி படைக்கட்டும்!
இல்லைத் தளைகள் இல்லை என மணி
ஈழம் மலரட்டும்!

-காசி ஆனந்தன்

### ஞானஒளி அருள்வாய்!

ஆற்றங்கரை மீதமர்ந்த வேலவா - தமிழர்
அவலம் தீர்க்க வேலுடனே எழுந்துவா; நாம்
நேற்றுவரை பட்ட அவலம் போதுமே - இனி
நிமிர்ந்து வாழ எமக்கு அருள்தாருமே; எங்கும்
காற்றுக் கூடச் சுதந்திரமாய் வீசுது - தமிழன்
கண்ணீர் வாழ்வைக் காலமின்று சொல்லுது; பக்தி
ஊற்றெடுக்கும் உன் பக்தர்களைக் காத்திடு - துயரம்
ஓடி ஒழிய ஞான ஒளி வீசிடு.

-பாண்டியன்-


மகாலக்சுமி தங்கமாளிகை
தங்கப் பவுண் நகை வியாபாரம்
(சி-10145) பிரதான சாலை, நெல்லியடி, கரவெட்டி.

யோகாஸ் கிறீம் ஹவுஸ்
கந்தமுருகேசனார் சிலையடி,
மந்திகை, (சி-10144) பருத்தித்துறை.

அம்பிகை
நகைமாடம்
நெல்லியடிச்சந்தி, நெல்லியடி.
(சி-10143)

யசோ ரெக்ஸ்
பிரதானசாலை, நெல்லியடி.
(சி-10142)

ஜமுனா ஸ்ரோர்ஸ்
தம்ரோ தளபாட நிலையம்
பிரதானசாலை, நெல்லியடி.
T.P:- 021 2263970 (சி-10141)

செல்லமுத்தூஸ்
புடைவை மாளிகை
பிரதானசாலை, நெல்லியடி.
T.P:- 021 2263238 (சி-10140)



எமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் தேரேறிவரும் செல்வச்சந்நிதி முருகனருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

வடமராட்சி மண்ணில்

சுவைத் தென்றல் கிறீம் ஹவுஸ்
SUVAI THENDRAL CREAM HOUSE

சுவையின் தரச்சிறப்பை நோக்கிய தென்றலின் பயணம், அதுவே சுவைத் தென்றலின் இனிய பயணம் இணைந்திடுவீர் எம்முடன் வாங்கி மகிழ்ந்திடுவீர்.

உங்கள் இல்லங்களில் நடைபெறும் மங்களகரமான வைபவங்களுக்கு பரிமாறிக்கொள்ளத் தேவையான சகல விதமான ஐஸ்கிறீம் வகைகளை ஓடர் கொடுத்து பெற்றுக் கொள்ள
சுவைத் தென்றல் கிறீம் ஹவுஸ்
கே. வி. சூரியகுமாரன்
நிறுவன உரிமையாளர்.



நிறுவன முகவரி:-
சுவைத் தென்றல் கிறீம் ஹவுஸ்
சாரையடி, புலோலி தெற்கு,
புலோலி.

T.P:- 0776-319656 (சி-9999)

# சின்னமுத்து, ருபெல்லா தடை மருந்து வழங்கலைப் பூரணப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம் செப்ரெம்பர் 11ஆம், 12ஆம் திகதிகளில் - 2004

சின்னமுத்து நோயானது தீவிரமாகத் தொற்றக்கூடிய, குறுகிய காலத்தில் ஏற்படும் ஒரு வைரஸ் நோயாகும். ஏழாம் நூற்றாண்டில் ரேசஸ் என்பவர் இந் நோயை விபரித்துள்ளார். மற்றும் பத்தாம் நூற்றாண்டில் அராபிய வைத்திய நிபுணர் ஒருவர் அம்மையிலும் பார்க்க கொடியது சின்ன முத்து நோயெனக் கூறியுள்ளார். பிரான்சின் 15ஆவது அரசன் லூயிஸ் என்பவர் தன் தாய், தந்தை மற்றும் சகோ தரர்களை இழந்து தனி ஆளாய் நின்றது சின்னமுத்து நோயினால் இன்னும் உலகில் ஒவ்வொருவரிடமும் சின்ன முத்து நோயினால் ஏற்படும் பாதிப்புக் காரணமாக இரண்டு மில்லியன் சிறுவர்களை இழக்கிறோம் எனத் தொற்று நோயியல் பிரிவு சுகாதாரக் கணிப்பு மையங்களின் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இலங்கையில்கூட தடுப்பு மருந்து வழங்கும் காலத் திற்கு முன்னதான காலப்பகுதியில் சின்னமுத்து நோய் பல சிறுவர்களை தாக்கிவந்த பொதுவான நோயாகக் காணப்பட்டது. 1980ஆம் ஆண்டில் 13000இற்கு மேற்பட்ட சிறுவர்கள் சின்னமுத்து நோயின் சிக்கல் காரணமாக வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டனர்.

ஒரு பிள்ளையை சின்னமுத்து நோய் பீடித்தால் அந்நோயிலிருந்து விடுபட குறைந்தது ஏழு நாட்கள் எடுக்கும். சிறு பிள்ளையாக இருக்குமானால் அதனை தாய் அல்லது தந்தை இக்காலப் பகுதியில் கவனமாகப் பராமரிக்க வேண்டும். அநேகமாக எமது பிரதேச பெற்றோர்கள் இருவருமே நாளாந்தம் உழைத்துப் பிழைப்பவர்கள். ஆதலால், இவ்வாறான நிலைமை அவர்களது குடும்ப வருமானத்தில் கணிச மான அளவிற்கு பாதிப்பை ஏற்படுத்தும். சிறுவர்களுக்கு நிமோனியா, வயிற்றோட்டம், மூளை அளர்ச்சி போன்ற தொற்று நோய் ஏற்பட்டு அதற்காக வைத்தியசாலைகளில் அனு மதிக்கப்படுவது அவர்களது வருமானத்திற்கு இன்னும் சுமையைக் கூட்டும். மேலும், வளர்ந்த சிறுவர்கள் பரீட் சைக் காலத்தில் ஏற்பட்ட இந்நோய் காரணமாக பரீட் சைக்குத் தோற்றமுடியாமல் இருந்ததாகவும் அறியப்பட்டுள்ளது.

சின்னமுத்து நோயினால் ஏற்படும் நோய் நிலைமைகளையும், மரணங்களையும் குறைக்கும் நோக்கத்துடன் 1984ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் விரிவுபடுத்தப்பட்ட நோய்த் தடை மருந்து வழங்கும் திட்டத்தில் சின்னமுத்து தடை மருந்து சேர்க்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து சின்ன முத்து நோய் நிலைமைகளும், மரணங்களும் குறைந்து கொண்டு வந்தன. கடந்த பத்தாண்டு காலப் பகுதியில் ஒப்பீட்டளவில் சின்னமுத்து நோய் மிகக் குறைந்த அளவிலேயே காணப்பட்டது. 1999 செப்ரெம்பர் தொடக்கம் 2000 யூன் வரையான காலப்பகுதியில் இதன் எண்ணிக்கை வருடாவருடங் களாக சேர்ந்து பாரிய எண்ணிக்கையாகவுள்ளது. இதனால், கூடுதலான பெருக்கம் ஏற்பட்டது.

சுகாதார சேவைகள் திணைக்களத்தின் தொற்று நோயியல் பகுதியினர் 15000 இற்கு மேற்பட்டவர்கள் சின்ன முத்து நோயினால் பாதிக்கப்பட்டவர்களாக தெரிவித்துள்ளனர். இவ்வாறான நோய் தொற்றுக்கு ஆளாகக்கூடியவர் களின் தொகை வருடக்கணக்கில் சேர்ந்து நோயாளியுடன் இலகுவாகத் தொடர்புபடக் கூடிய அளவில் வரும போது நோய் கட்டுக்கடங்காத பெருக்கம் ஏற்படும்.

இலங்கையில் வழக்கத்தில் உள்ளபடி தாயிலிருந்து பெறப்பட்ட பிறபொருள் எதிரி இருக்கும் காலத்திலேயே அதாவது, பிறந்த ஒன்பதாவது மாதத்திலேயே முதலாவது சின்னமுத்து நோய்த் தடை மருந்து வழங்குவதால் 90 சதவீதம் பாதுகாப்பு மட்டும் கிடைப்பதே. 1999 தொடக்கம் 2000 ஆண்டளவில் ஏற்பட்ட கட்டுக்கடங்காத நோய்ப் பெருககத்திற்குக் காரணமாய் அமைகின்றது. எனவே, தடை மருந்து பெற்றவர்களில் பத்து சதவீதத்தினர் போதியளவில் நோய்த் தடைச் சக்தியை விருத்தி செய்யாத நிலையினாலேயே நோய்க்கு ஆளாகும் ஆபத்திலுள்ள நிலையை அடைகின்றார்கள்.

நோய்த் தடை மருந்து பெற்றவர்களிற் சிலர் நோய் எதிர்ப்புத் தன்மையைக் காலக் கிரமத்தில் இழக்கின்றார்கள். இதனுடன் நோய்த் தடை மருந்து வழங்கிய அளவு நூறு சதவீதமாக இல்லாவிடின் சில குழந்தைகள் இம் மருந்தைப் பெற்றே இருக்கமாட்டார்கள். நோய் ஏற்படக் கூடிய ஆபத்தில் உள்ளவர்களில் இக்குழந்தைகளும் சேர்ந்து கொள்வர். இவ்வாறாக, நோய்த் தொற்றலுக்கு ஆளாகக்கூடியவர்களின் தொகை வருடா வருடமாகச் சேர்ந்து நோய் கட்டுக்கடங்காத பெருக்கம் ஏற்படும். இறுதியாக ஏற்பட்ட நோய்ப் பெருக்கத்தின்போது 48 சதவீதமானவர்கள் 10 முதல் 28 வயது கூட்டத்தவர்கள் ஆவர். இவ்வயதிற்குட்பட்டவர்கள் சிலர் விரிவுபடுத்தப்பட்ட நோய்த் தடை வழங்கும் திட்டத்தில் சின்னமுத்து நோய் தடை மருந்து இணைக்கப்பட முன்பே பிறந்தவர்களாகலாம். சிலர் ஒருமுறை மட்டுமே சின்னமுத்து நோய்த் தடை மருந்து பெற்றவர்களாக இருக்கலாம். அக்கால கட்டத்தில் சின்ன முத்து நோய்த் தடை மருந்தைப் பெற்றிருக்கமாட்டார்கள்.

> **சுகாதார சேவைகள் திணைக்களத்தின் தொற்று நோயியல் பகுதியினர் 15000 இற்கு மேற்பட்டவர்கள் சின்னமுத்து நோயினால் பாதிக்கப்பட்டவர்களாகத் தெரிவித்துள்ளனர். இவ்வாறான நோய்த் தொற்றுக்கு ஆளாகக்கூடியவர்களின் தொகை வருடக்கணக்கில் சேர்ந்து நோயாளியுடன் இலகுவாகத் தொடர்புபடக் கூடிய அளவில் வரும்போது நோய் கட்டுக்கடங்காத பெருக்கம் ஏற்படும்.**

முதலாம் தர நோய் எதிர்ப்பு சக்தி உருவாக்கலில் தவறுதலின் காரணமாக ஏற்படும் நோய்களாகும். எண்ணிக்கையைக் குறைக்கும் நோக்கத்துடன் 2001ஆம் ஆண்டு சின்னமுத்து ருபெல்லா (MR) நோய்த் தடை மருந்தும் 2001 ஏப்ரல், மே மாதங்களிலிருந்தும் வழமையான அட்டவணையுடன் சேர்க்கப்பட்டது. அதன் பின்னர் இருந்து 1998 ஏப்ரல் மாதத்தின் பின் பிறந்த எல்லாக் குழந்தைகளும் மூன்று வயதை அடையும்போது சின்ன முத்து ருபெல்லா (MR) நோய்த் தடை மருந்து ஒரு தடவை வழங்கப்பட்டு வருகின்றது. 1999இற்கு முன் பிறந்த எவருக்கும் இப்படியான சின்னமுத்து தடை மருந்து பெறக்கூடிய இரண்டாவது சந்தர்ப்பம் கிடைக்கப்பெறவில்லை. 1984ஆம் ஆண்டிற்கு முன்பே மற்றும் 1984ஆம் ஆண்டிற்கும், 1991ஆம் ஆண்டிற்கும் இடையில் பிறந்த எவருக்கும் சின்னமுத்து தடை மருந்து பெறக் கூடிய வாய்ப்பு ஒரு முறைகூடக் கிடைக்கவில்லை. கட்டுப்பாட்டை மீறிய நோய்ப் பெருக்கம் ஏற்படுவதை, நோய் பரவிக்கொண்டிருப்பதைத் தடுக்க நோய் தொற்றக்கூடியவர்கள் தொகை யைக் கூடியவரை குறைவான எண்ணிக்கையாக்க வேண்டும். இந்த முதன்மையான நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டே 2003 ஆம் ஆண்டு 10 முதல் 14 வயது வரையுள்ள எல்லாச் சிறுவர்களையும் இலக்குனர்களாகக் கொண்டு சின்னமுத்து நோய்த் தடுப்பு மருந்தேற்றலை பூரணப் படுத்தும் திட்டத்தில் முதலாம் படிநிலை செயற்பாடும், 2004ஆம் ஆண்டு 16 முதல் 20 வயது வரையுள்ள பிள்ளைகள் (ஆண், பெண்) இலக்கினர்களாகக் கொண்டு நடாத்தப்படவுள்ளது.

பிறப்பில் இருந்து ஏற்படக் கூடிய ருபெல்லா நோய்த் தாக்கத்தைத் தடுக்கும் நோக்குடனேயே 1996ஆம் ஆண்டு 11 முதல் 44வயது வரையான எல்லாப் பெண்களையும் இலக்குனர்களாகக் கொண்டு ருபெல்லாத் தடை மருந்து வழங்கலையும் விரிவுபடுத்தப்பட்ட நோய்த் தடை மருந்து வழங்கும் இயக்கத்தில் சேர்க்கப்பட்டது. 11முதல் 15 வயது வரையான பெண்களுக்கும் பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட வகையிலும், ஏனையோருக்கும் சமூக மட்டத்தில் நோய்த் தடை மருந்து வழங்கப்பட்டது. 2001ஆம் ஆண்டு பிறப்பில் இருந்து ஏற்படும் ருபெல்லா நோய்த் தாக்கத்தை மட்டுமல்ல, ருபெல்லா நோய்த் தொற்றினைத் தடுக்கும் நோக்குடன் மூன்று வயதிலுள்ள எல்லாப் பிள்ளைகளுக்கும் (ஆண், பெண் உட்பட) சின்னமுத்து ருபெல்லா நோய்த் தடை மருந்து அறிமுகப்படுத்தப்பட்டது. சின்னமுத்து ருபெல்லா நோய்த் தடை மருந்து வழங்குதலால் பிள்ளைபெறு வயதிலுள்ளவர்களுக்கும், பிறப்பிலிருந்து ஏற்படக்கூடிய ருபெல்லா நோய்த் தாக்கமுள்ள பிள்ளையும் பிறப்பை தடுத்தல் உட்பட எல்லோருக்கும் ருபெல்லா நோயை மட்டுமல்ல சின்னமுத்து நோய் ஏற்படுவதிலிருந்தும் பாதுகாக்கப்படுகின்றது.

**சின்னமுத்து - ருபெல்லா நோய்த் தடை மருந்தைப் பூரணப்படுத்தும் நிகழ்ச்சியின் குறிப்பிட்ட நோக்கங்கள்**

01) ஒரு முறை தானும் நோய்த் தடை மருந்தைப் பெறாத 16 தொடக்கம் 20 வயது கூட்டத்தில் உள்ளவர்களுக்கும் சின்னமுத்து மற்றும் ருபெல்லா நோய்த் தடை மருந்தைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பைக் கொடுத்தல்.
02) ஏற்கனவே சின்னமுத்து மற்றும் ருபெல்லா நோய்த் தடை மருந்தை ஒருமுறை மட்டும் பெற்றுள்ளோர்களுக்கும் இரண்டாவது சந்தர்ப்பத்தைக் கொடுத்தல்.
03) நோய்க்கு ஆளாகக்கூடியவர்களுக்கு நோய்த் தடை மருந்து வழங்குவதன் மூலம் சின்னமுத்து நோய் வைரஸ் பரவுதலையும் நோயின் கட்டுக்கு மீறிய பெருக்கத்தையும் தடுப்பது.
04) எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பிறப்பிலிருந்து ஏற்படும் ருபெல்லா நோய்த்தாக்கத்தைக் குறைப்பது.

**தகவல் :- தமிழீழ சுகாதார சேவையினர்**


## கணக்காய்வுப் பயிலுநருக்கான ஆட்சேர்ப்பு

நிதித்துறைக் கணக்காய்வுப்பகுதிக்குப் பயிலுநருக்கான ஆட்சேர்ப்புக்குக் கீழ்வரும் தகைமையுடைய ஆர்வமுள்ளோரைக் குறித்த நாளில் நேரில் வருகைதருமாறு வேண்டுகிறோம்.

**கல்வித்தகைமை:-**

01. க.பொ.த. (சா/த) தேர்ச்சி
02. க.பொ.த.உ/தரத்தில் வர்த்தகப்பிரிவில் கணக்கியல் உட்பட 03 பாடங்களில் தேர்ச்சி

**அகவை:-** : 21 -30

**பயிற்சிக்காலக்கொடுப்பனவு:-** உருபா 5000

**பயிற்சிக்காலம்:-** 6 மாதங்கள்

பயிற்சிக்காலம் நிறைவுற்றதும் நிதித்துறைச் சம்பளத்திட்டத்திற்கமைவாக கணக்காய்வுப் பணிக்கு பணியமர்த்தம் வழங்கப்படும்.

**நேர்காணல் நடைபெறும் இடம்:-**

***கிளிநொச்சி***

இடம்:- வருவாய்ப்பகுதிச் செயலகம்
காலம்:- .02.09.2004
நேரம்:- மு.ப.9.30

***யாழ்ப்பாணம்***

இடம்:- சந்தைப்பகுதிச்செயலகம்
ஆடியபாதம் வீதி கொக்குவில்
காலம்:- 30.08.2004
நேரம்:- மு.ப.9.30

**குறிப்பு :-**
தகைமையுடையவர்கள் கல்வித்தகைமைச்சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ் ஆகியவற்றுடன் வருகைதரவும்.

ஆளுநகை,
கணக்காய்வுப்பகுதி,
நிதித்துறை.

(சி-10090)


# இந்திய ஆளும்-எதிர்க்கட்சி பலப்பரீட்சை கணக்குத் தீர்ப்பதில் குறி!

**அ.கலைவாணி**

இந்திய அரசியலில் அண்மைக் காலமாக பரபரப்பான சம்பவ்ங்களுக்கு பஞ்சமில்லை. இவை எதிர்பாராத துரித கதியில் நடந்து முடிந்து கொண்டிருக்கின்றன. ஆளும் கட்சியும், எதிர்க் கட்சியும் தமக்குள் பலப்பரீட்சை நடத்தி வெற்றி யாருக்கு என்பதில்தான் தீவிரம் காட்டி வருகின்றன.

இந்த வகையில் ஆளும் கட்சியைச் சேர்ந்த மத்தியமைச்சர் சிறையிலடைக்கப் பட்டு ஒரு மாதம் பூர்த்தியாகவில்லை. எதிர்க்கட்சியைச் சேர்ந்த மாநில முதலமைச்சர் சிறைக்குள் தள்ளப்பட்டிருக்கின்றார். ஆக---- ஆளும்கட்சியும், எதிர்க் கட்சியும் கணக்குத் தீர்ப்பதில்தான் அதீத ஆர்வம் காட்டுவதையே இவ்விரு சம்பவங்களும் எடுத்துக்காட்டுகின்றன.

"முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்" என்ற நிலையினைத்தான் இந்திய அரசியலில் எதிர்க்கட்சியான பாரதிய ஜனதாக் கூட்டணி தற்போது அனுபவிக்க நேர்ந்துள்ளது. இதுவரை அக்கட்சிதான் ஆளும் கட்சிக்கு உபாதைகளை ஏற்படுத்தி வந்த காட்சியாக இருந்தது. மாறாகத் தற்பொழுது ஆளும் கட்சி எதிர்க்கட்சியை இம்சைக்குள்ளாக்கும் காட்சிகள் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன.




உமாபாரதி முதலமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்ததும், புதி[illegible]பதும்.



முரளி மனோகர் ஜோஷி



ஜார்ச் பெர்னான்டஸ்



அத்வானி

இதனடிப்படையில் பாரதிய ஜனதாக் கட்சியின் மத்திய பிரதேச முதலமைச்சர் உமாபாரதியை இலக்கு வைத்துத்தான் ஆளும் கட்சி காய்நகர்த்தியுள்ளது.

இந்தக் காய் நகர்வின் எதிரொலியே உமாபாரதியை கைதுசெய்ய கர்நாடக மாநில நீதிமன்றம் கைதாணை பிறப்பித்தமை; உமாபாரதி முதலமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்தமை; கர்நாடகப் பொலிசாரால் கைது செய்யப் பட்டுள்ளமை; சிறையிலடைக்கப்பட்டுள்ளமை; போன்ற விடயங்கள் சடுதியில் நடந்து முடிந்திருக்கின்றன.

1994 இல் கர்நாடக மாநிலத்தில் சுதந்திர தினவிழாவில் தேசியக் கொடியேற்றிய உமாபாரதி தனது இந்துத்துவாத் தீவிரத்தை வெளிப்படுத்தியதன் விளைவு கலவரமும், உயிர்ப்பலியையும் ஏற்படுத்தியது.

தேசியக் கொடி ஏற்றிய உமாபாரதி "இராமரின் பெயரால் கொடி ஏற்றப்பட்டது" என்று கூறியதன் பிரதிபலனே ஆறு உயிர்கள் பலியாகின.

இதனால் உமாபாரதி மீது கலவரத்தைத் தூண்டியதாகவும், ஆறு உயிர்கள் பலியாகக் காரணம் என்பதாகவும் வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

ஆனால் உமாபாரதி கைது செய்யப் படவோ, நீதிமன்றத்தில் விசாரணைக்குட் படுத்தப்படவோ இல்லை. அதற்கு சந்தர்ப்பமும் ஏற்படவில்லை. ஏனெனில் மத்தியில் பாரதிய ஜனதா ஆட்சி இருந்தமையே பிரதான, வலுவான காரணம் அன்றி வேறில்லை.

ஆனால் ஆளும்கட்சியாக இருக்கும் போது மௌனமே வடிவமாக இருந்த பாரதிய ஜனதாக் கூட்டணி, நடந்து முடிந்த மக்களவைத் தேர்தலுடன் எதிர்க்கட்சி வரிசைக்குத் தள்ளப்பட்டது. இதன் காரணமாக ஆளும் கட்சியை சிக்கலுக்குள் மாட்டி விடும் வகையில் செயற்படத் தொடங்கியது.

29 வருடகாலத்திற்கு முன்பு சிபுசோரன் தமது கூட்டணியில் அங்கம் வகிக்கும்போது நடந்த கொலை வழக்கை இப்போது கிளறி, சிபுசோரனை சிறையிலடைத்த பின்னர்தான் ஓய்ந்தது எனலாம்.

உண்மையில் ஆளும் கட்சி மீது எதிர்க்கட்சி வீசிய பிரமாஸ்திரம்தான் திரும்பி அவர்களையும் தாக்க நேரிட்டுள்ளது. ஆளும்கட்சியினரில் கறைபடிந்தவர்களை இனம்காண முற்பட்ட எதிர்க்கட்சி தமது கட்சி சுத்தமானதா.... என்பதை ஏன் ஆராய முற்படவில்லை...?.

ஆனால் ஆளும் கட்சி சும்மா இருந்துவிடத் தயாரில்லை என்பதைத்தான் உமாபாரதியின் கைது காட்டுகின்றது. 10 வருட காலத்திற்கு முன்னர் நடந்த கலவர உயிரிழப்பு வழக்கைத் தாமும் கையிலெடுத்துவிட்டது..

ஆக.... ஆளும்கட்சியும் சரி எதிர்க்கட்சியும் சரி தமது பல்லைக் குத்தி அதன் மணத்தை பாமரர் முதல் அனைவருக்கும் நாறடித்துக்கொண்டிருக்கின்றார்கள் என்றால் மிகையில்லை. ஊழல்கிரிமினல்தான் அரசியலின் மறுவடிவமோ... என்று அச்சம் கொள்ளும் அளவுக்குத்தான் இந்திய அரசியலில் நிலைமைகள் மோசமடைந்து வருகின்றன.

இதேவேளை உமாபாரதி மீதான வழக்கை கர்நாடக அரசு திரும்பப் பெற வேண்டும் என்று பாரதிய ஜனதா கர்நாடகத்தில் நடத்திய ஆர்ப்பாட்டம் சோபை இழந்துதான் போனது. இதற்கு கர்நாடகத்தில் காங்கிரஸ் ஆட்சியில் இருப்பது காரணமாக இருந்திருக்கலாம்.

இதேவேளை மாநிலத்திலும் மத்தியிலும் காங்கிரஸ் கூட்டணி ஆட்சியில் இருப்ப தால் உமாபாரதி மீதான வழக்கு திருப்பப் பெறப்படுவது என்பது நடக்கக் கூடிய ஒன்றல்ல. மாறாக உமாபாரதி சிறையில் அதிகமாகக் காலம் கழிக்கும் நிலை உருவாகும் என்று நம்பலாம்.

இதேவேளை இதே உமாபாரதிதான் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி பிரதமர் பதவி ஏற்றால் முதலமைச்சர் பதவியிலிருந்து விலகிவிடப் போவதாகவும் மத்திய பிரதேசத்தில் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை நடத்தப் போவதாகவும், அறிவித்திருந்தவர். இன்றோ கலவரத்தை ஏற்படுத்தி உயிரிழப்பிற்குக் காரணம் என்ற பெயருடன் அவர் தனது முதலமைச்சர் பதவியை இழக்க வேண்டிய நிலை உருவாகியமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை உமாபாரதி கைது செய்யப்பட்டிருப்பதால் இரு அவைகளையும் எதிர்க்கட்சிகள் புறக்கணிக்கவும், கூச்சல், குழப்பம் ஏற்படுத்தவும் முடிவு செய்துள்ளன.

எனவே இரு அவைகளும் சுமுகமாக நடைபெறும் என்று எதிர்பார்க்க முடியாது இரு அவைகளிலும் மக்களுக்குத் தேவையானவற்றை விவாதிப்பதற்குப் பதிலாக ஆளும் கட்சியும், எதிர்க்கட்சியும் அடுத்தவர் குறைகளை தரம் பிடித்து பார்க்க முற்பட்டே நிற்கின்றன.

ஆனால் எதிர்க்கட்சியினர் தாமாக அடங்கும் வரை ஆளும்கட்சி விட்டுவிடுவதாகவும் தெரியவரவில்லை. ஏனெனில் அயோத்தி இடிப்பு வழக்கில் அரச சார்பில் வாதிடும் வழக்கறிஞர் மத்தியரசினால் புதிதாக நியமிக்கப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது.

முன்பு அயோத்தி வழக்கை அரசசார்பில் நடத்தியவர் பாரதிய ஜனதாக் கட்சி ஆட்சியில் நியமிக்கப்பட்டவர் என்பதனால்தான் வழக்கறிஞர் மாற்றம் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது.

எனவே அயோத்தி வழக்கு மீண்டும் சூடுபிடிக்கும் எனும் எதிர்பார்ப்பும் நிலவுகின்றது. அன்று ஆளும் கட்சியிலிருந்த அத்வானி, உமாபாரதி, முரளிமனோகர் ஷோஜி ஆகியோர் உள்ளிட்ட பலர் இந்த வழக்கில் தொடர்புடையவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே ஆளும் கட்சியின் அடுத்த இலக்கு அயோத்தி இடிப்பு வழக்கை உசாரடையச் செய்வதாக இருக்கலாம். ஏற்கனவே உமாபாரதி கலவரத்தை ஏற்படுத்திய வழக்கில் சிறையிலிருப்பதால் அயோத்தியும் சேர்ந்து உமாபாரதியை இன்னும் இம்சைப்படுத்தக் கூடும்.

அது மட்டுமன்றி கார்கில் போரில் சவப்பெட்டி வாங்கிய ஊழல்குற்றச்சாட்டும் வழக்கும் ஜோர்ச் பெர்னாண்டஸ் மீது இன்னும் நிலுவையில் இருக்கின்றது. எனவே எதிர்க்கட்சியினரை கிடுக்குப்பிடி பிடிப்பதில் தான் ஆளும்கட்சி செயற்பாடுகளை நகர்த்தி விடுவதாக நம்பப்படுகின்றது.

உண்மையில் ஆளும் கட்சியை உசுப்பி விட்டது எதிர்க்கட்சிதான். சிபுசோரனில் கைவைத்ததன் விளைவுதான் எல்லாவற்றிற்கும் காரணம். "சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தான் ஆண்டி" என்பது தற்போது பாரதிய ஜனதாக் கூட்டணிக்கு கனகச்சிதமாகப் பொருந்தியுள்ளது.

இந்த நிலை நீடிப்பதனால் நிச்சயம் பாதிக்கப் படப்போவது ஆளும்கட்சியும், மக்களும் தான்! ஏனெனில் மக்களின் நலன்களுக்காகத் திட்டமிட வேண்டிய ஆளும்கட்சி, எதிர்க்கட்சியை மடக்குவது எப்படி.... என் பதிலேயே காலத்தைக் கழிக்கப்போவது என்பதே உண்மை.

இதேவேளை உண்மை என்று ஒன்றும் இருக்கின்றது. மத்தியில் ஆளும்கட்சியில் அங்கம் வகிக்கும் மாநில கூட்டணிக் கட்சிகள் மிகப்பெரிய தப்பு செய்தபோதும் தண்டிக்கப்படவில்லை. அப்போதெல்லாம் நீதி தூங்கித்தான் போயிருக்கின்றது. அதாவது நீதித்துறையில் அரசியல் செல்வாக்கு மிகவும் பாரதூரமான தாக்கத்தைத்தான் ஏற்படுத்தியிருக்கின்றது.

மாறாக காலமெல்லாம் நீதி தூங்கி விடாது என்பதையும், தப்புச் செய்தவர்கள் தண்டனை பெற்றே ஆகவேண்டும் எனும் நீதிக்கருத்தும் பொய்த்துப் போகவில்லை என்பதை சிபுசோரனும் உமாபாரதியும் கைது செய்யப்பட்டிருப்பது நிரூபிக்கத் தவறவும் இல்லை என்றால் மிகையில்லை.

## சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபடும் அரசியல்வாதிகளைக் கைது செய்ய முடியவில்லை

### - சிறிலசிறுவர் பாதுகாப்பு மையத் தலைவர் தெரிவிப்பு

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் பல்வேறு அரசியல்வாதிகள் குற்றம் சுமத்தப்பட்டுள்ள போதிலும் அவர்கள் காட்டிவருகின்ற பலப்பிரயோகத்தினால் அவர்களைக் கைது செய்ய முடியாதுள்ளதால் இது தொடர்பாக சனாதிபதியுடன் பேசவுள்ளதாக சிறுவர் பாதுகாப்பு மையத்தின் தலைவர் தெரிவித்துள்ளார். அத்துடன் சனாதிபதி இதற்கு உரிய ஆதரவு வழங்குவாராக இருந்தால் இவ்வாறான அரசியல்வாதிகளைத் தம்மால் கைது செய்ய முடியும் எனவும் இப்போது குறிப்பிட்ட நான்கு அரசியல் வாதிகள் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான குற்றச்சாட்டிற்கு உள்ளாகியுள்ளனர். அந்த நான்கு அரசியல் வாதிகளைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளுக்கு சனாதிபதி ஆதரவு வழங்குவராக இருந்தால் உடனடியாகக் கைது செய்யலாம் இதேபோன்று அரசாங்க உத்தியோகத்தில் உள்ள அரச உயர் அதிகாரிகள் பலர் சிறுவர் துஷ்பிரயோக்தில் ஈடுபட்டதற்கான சான்றுகள் எம்மிடம் உள்ளன. ஆயினும் அதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு எமக்கு உரிய அதிகாரம் இல்லாமல் இருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (32)

## பிரதமருக்கான பாதுகாப்பு அறிவிப்பின்றிக் குறைப்பு

பிரதமமந்திரிக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் குறைக்கப்பட்டிருப்பதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது நாட்டின் மிக முக்கிய தலைமைப் பொறுப்பிலுள்ள பிரதமரின் பாதுகாப்பை எந்தவித முன்அறிவிப்புமின்றி பொலிசார் குறைத்துள் ளமை குறித்து விரிவான அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்குமாறு பொலிஸ் மா அதிபர் இந்திரா டீ சில்வாவிற்கு அமைச்சரவை உத்தரவிட்டுள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவீக்கப்படுகின்றது.

இதேவேளை தொழிற் சங்கப் போராட்டங்கள் நடைபெறும் போது பொலிசார் தொழிற்சங்கவாதிகள் மீது மேற்கொள்ளும் வன்முறைகள் குறித்து நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளதோடு இது குறித்தும் அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு பொலிஸ் மா அதிபரிடம் கோரப்பட்டுள்ளது. (32)

# 4 ஆவது போட்டியிலும் தென்னாபிரிக்காவுக்கு தோல்வி ஆட்ட நாயகனாக சங்கக்கார தெரிவு




சிறிலங்காவுக்கு எதிரான நான்காவது ஒரு நாள் போட்டியிலும் தென்னாபிக்க அணி தோல்வியடைந்துள்ளது.

எஸ்.எஸ்.சி மைதானத்தில் நடைபெற்ற இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் 7 விக்கெட்டுக்களை இழந்து 235 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் சோன்பொலக் 52 ஓட்டங்களைப் பெற்றார்.

வெற்றி இலக்கை நோக்கி ஆடிய சிறிலங்கா 46.1 ஓவரில் 3 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.


துடுப்பாட்டத்தில் குணவர்த்தன 52 ஓட்டங்களையும், சங்கக்கார ஆட்டமிழக்காது 74 ஓட்டங்களையும் அதிக பட்சமாக பெற்றனர்.

போட்டியில் சிறப்பாட்டக்காரராக சங்கக்கார தெரிவானார்.

நேற்றைய போட்டியில் அத்தப்பத்து, சமிந்தவாஸ், சொய்சா ஆகியோர் நீக்கப்பட்டு மாற்று வீரர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

5 போட்டிகள் கொண்ட தொடரில் இறுதிப் போட்டி நாளை நடைபெறவுள்ளது.

# போலந்து வீரர் சாதனை





ஒலிம்பிக் 50 கி.மீ. நடைப்போட்டியில் போலந்து வீரர் ரபார்ட் கோர்ச்னெய்வசிகி தொடர்ந்து மூன்றாவது முறையாக தங்கம் வென்று சாதித்தார்.

நடைப்போட்டிகளில் 36 வயதான ரபார்ட்டின் ஆதிக்கம் தொடர்ந்து நீடிக்கிறது இவர் அ்லாண்டா (1996) சிட்னி (2000) ஒலிம்பிக்கில் தங்கம் வென்றார். நேற்று நடந்த 50 கி.மீ நடைப் போட்டியில் இவர் 3 மணி நேரம் 38நிமிடங்கள் 46 வினாடிகளில் கடந்து தங்கத்தை தக்க வைத்துக் கொண்டார். இது ஒலிம்பிக்கில் இவர் பெறும் நான்காவது தங்கப் பதக்கம் அதாவது 50 கி.மீ நடைப்போட்டியில் 3மற்றும் 20கி.மீ (சிட்னி) நடைப்போட்டியில் ஒரு தங்கம் கைப்பற்றியுள்ளார். ரஷ்ய வீரர்களான டெனிஸ் செகோரோடோவ் (3.42.50) அலெக்சி வொயாவிடின் (3.43.34) முறையே வெள்ளி,வெண்கலம் வென்றனர்.

## எதென்ஸ்-2004

நேற்றைய போட்டிகளில் சில...



பெண்களுக்கான கூடைப் பந்துப் போட்டியில் ரஷ்யாவிற்கு எதிரான போட்டியின் பின் பிரேசிலின் அலெக்ஷ் சாண்ட் ராவை அணி சகா ஆறுதல் படுத்துகிறர்.



ஆர்ஜன்டினா கால்பந்து வீரர்களில் சிலர் தங்கப் பதக் கங்களுடன்

# கால்பந்துப் போட்டியில் ஆர்ஜன்டீனாவுக்கு தங்கம்



எதென்ஸ் ஒலிம்பிக் ஆண்களுக்கான கால்பந்துப் போட்டியில் ஆர் ஜன்டீனா-பரகுவேயை 1-0 என்ற கோல் எண்ணிக்கையில் வெற்றி கொண்டு தங்கப் பதக்கத்தை சுவீகரித்துக் கொண்டது.

52 வருடங்களின் பின் ஒலிம்பிக் கால்பந்துப் போட்டியில் பெற்ற முதலாவது தங்கப் பதக்கமாக இது அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இப்போட்டியில் பரகுவே நாட்டின் இரண்டு வீரர்கள் சிவப்பு அட்டை காட்டப்பட்டு, வெளியேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# நெதர்லாந்தை வீழ்த்தி தங்கம் வென்றது ஜெர்மனி

ஒலிம்பிக் ஹொக்கிப் போட்டியில் ஜெர்மனி முதன் முதலாக தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றியுள்ளது.

வியாழக்கிழமை நடைபெற்ற மகளிருக்கான இறுதி ஆட்டத்தில் ஜெர்மனி அணியினர் 2-1 என்ற கோல் கணக்கில் நெதர்லாந்தைத் தோற்கடித்தனர்.

முதல் பாதியிலேயே 2 கோல் களைஅடித்து முன்னிலை பெற்ற ஜெர்மனி பிற்பாதியில் எதிரணியை ஒரு கோல் அடிக்க வழிவிட்டது.

1944 லாஸ் ஏஞ்சலீஸ் போட்டியில் இவ்விரு அணிகளே இறுதிச் சுற்றில் மோதின. ஆனால் அதில நெதர்லாந்து வெற்றி பெற்றது. 20 ஆண்டுகளுக்குப் பிறகு அத் தோல்விக்கு பழி தீர்த்துக் கொண்டுள்ளது ஜெர்மனி.

# நீளம் தாண்டுதல் அமெரிக்காவுக்கு தங்கம்

எதென்ஸ் ஒலிம்பிக் ஆண்களுக்கான நீளம் தாண்டுதல் இறுதிப்போட்டிகள் கடந்த வியாழனன்று நடந்தன. இதில் அமெரிக்காவின் டிவைட் பிலிப்ஸ் 8.59 மீ.தூரம் தாண்டி தங்கம் வென்றார். மற்றொரு அமெரிக்க வீரரான ஜான் மொப்பிட் 8.47 மீ. தாண்டி வெள்ளியும், ஸ்பெயினின் ஜுவான் லினோ மார்ட்டினாஸ் 8.32 மீ, தாண்டி வெண்கலமும் வென்றனர்.




# அமெரிக்க கூடைப்பந்து அணிக்கு ஒலிம்பிக்கில் அதிர்ச்சித் தோல்வி

எதென்ஸ் ஒலிம்பிக்கில் தங்கம் வெல்லும் என அனைவராலும் எதிர்பார்க்கப்பட்ட அமெரிக்கா வின் கூடைப்பந்து அணி அதிர்சசித் தோல்வியடைந்துள்ளது.

கனவு அணியென செல்லப் பெயர் கொண்டு வர்ணிக்கப்படும் அமெரிக்க அணி அரையிறுதிப் போட்டியில் ஆர்ஜன்டீனாவிடம் தோல்வியடைந்து வெளியேறி யுள்ளது.

இதனால் அமெரிக்காவுக்கு கிடைக்கவிருந்த வாய்ப்பு கை நழுவிப் போயுள்ளது. இப் போது வெண்கலப் பதக்கத்தை யாவது கைப்பற்றி விட வேண்டும் என்ற குறியில் உள்ளது அமெரி க்கா.

1936இல்இருந்து 109 போட்டிகளில் தொடர்ச்சியாக வெற்றி பெற்று வந்த அமெரிக்க அணி, இரண்டு போட்டிகளில் மாத்திரம் தோல்வி அடைந்தமை குறிப்பிடத் தக்கது.


# பரபரப்பான ஆட்டத்தின் பின் கோப்பையைக் கைப்பற்றியது அவுஸ்.

நெதர்லாந்தில் நடைபெற்ற முத்தரப்பு ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் நேற்று நடைபெற்ற இறுதிப் போட்டியில் பாகிஸ்தான் அணி யை 17ஓட்டங்களால் வெற்றி பெற்று அவுஸ் திரேலிய அணி வீடியோகான் கோப்பையை கைப்பற்றிக் கொண்டது.




முதலில் துடுப்பெடுத் தாடிய அவுஸ்தி ரேலிய அணி 50 ஓவர் முடிவில் 7 விக்கெட்டுக் களை இழந்து 192 ஓட்டங்களைப் பெற்றது. ஹைடன் 59 ஓட்டங்களையும் லீமன் 40 ஓட்டங்களையும் சிமென் 36 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சொஹைப் அக்தர் 3 விக்கெட்டுக்களையும் சபீர், சமிதலா ஒரு விக் கெட்டையும் கைபற்றினார். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 47-1 ஓவரில் சகல விக்கெட்டுககளையும் இழந்து 175 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. யுஹானா 43 ஓட்டங்களையும், மலிக் 36 ஓட்டங்களையும்,அப்துல் ரசாக் 26 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் சிமன்ஸ், லீமன் தலா இரு விக்கெட்டுக்களையும் மக்ராத்,கிலெஸ்பி, பிரெட்லீ ஹொக்தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்.

போட்டியின் சிறப்பாட்டக்காரராக அன்ருசைமன் தெரிவானார்.




பெண்களுக்கான மரதன் போட்டியில் பிரிட்டனின் சாதனையாளர் போலோ ரட்கிளிப்பைக் கடந்து ஓடும் ஜப் பானிய வீராங்கனை மிசுக்கி நொகுசி.




110 மீற்றர் தடை ஓட்டப் போட்டியில் தங்கம் வென்ற சீன வீராங்கனை

# ஒலிவ் இலை வளையத்துடன் நாடு திரும்ப நியூசிலாந்து தடை



எதென்சில் ஒலிம்பிக் போட்டி யில் கலந்து கொண்டு பதக்கம் பெற்றுள்ள நியூசிலாந்து வீரர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட ஒலிவ் இலைவளையத்துடன் நாடு திரும்ப முடியாது ஒலிவ் இலைகள் மற்றும் அதனுடன் வழங்கப்படும் மலர்க் கொத்துக் களை எதென் சிலேயே விட்டுவிட்டு நாடு திரும்புங்கள் என்று நியூசிலாந்து அரசு உத்தரவிட்டுள்ளது.

எதென்சில் தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கம் பெறும் வீரர்களுக்கு, பதக்கத்துடன் ஒலிவ் வளையம் மற்றும் மலர்கள் வழங்கப்படுகிறது. இதை கிரீஸ் பெருமையாகக் கருதுகிறது. வீரர்களும் அதை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்கின்றனர்.

# ரஷ்ய வீரர் நீக்கம்

ஊக்க மருந்து உட்கொண்டதற காக ரஷ்ய தடகள வீரர் ஆன்டன் கேல்கின் ஒலிம்பிக் போட்டிகளிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

இவர் 400மீற்றர் ஓட்ட அரையிறுதிச்சுற்றில் கடந்த 21ஆம் திகதி பங்கேற்றார். இதில் நான்காவதாக வந்த இவருக்கு ஊக்க மருந்து சோதனை நடத்தப்பட்டது. இந்த சோதனையில் இவர் தடை, செய்யப்பட்ட 'ஸ்டானோ சோலோல்' என்ற மருந்தை உட்கொண்டது கண்டு பிடிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து இவருக்கு எதென்ஸ் ஒலிம்பிக்கில் மீதமுள்ள போட்டிகளில் பங்கேற்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

# லக்கிஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடாத்தும் கால்பந்து, வலைப்பந்து இறுதிப் போட்டிகள் இன்று



நேற்றைய வலைப்பந்தாட்டப் போட்டியில் இருந்து


வட்டக்கச்சி லக்கிஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடாத்தி வரும் கால்பந்து,வலைப்பந்து இறுதிப் போட்டிகள் இன்று மாலை கழகமைதானத்தில் நடைபெறவுள்ளன.

கால்பந்துஇறுதிப் போட்டியில் உழவர் ஒன்றிய அணியை எதிர்த்து சந்திரோதய அணியும் வலை பந்தாட்டப் போட்டியில் வட்டக்கச்சி ம.வி. அணியை எதிர்த்து குருகுலம் அணியும் மோதுகின்றன.

முன்னதாக நேற்று நடைபெற்ற பரபரப்பான காலிறுதி அரையிறுதிப் போட்டிகளில் மேற்படி அணிகள் இறுதிப் போட்டிக்குத் தெரிவாகின.

இன்று நடைபெறும் இறுதிப் போட்டியைத் தொடர்ந்து பரிசளிப்பு விழாவும் நடைபெறவுள்ளது. (12)

## சிந்தனைக்கு



தனது தியாகத்தால் இந்த மண்ணுக்கு விடுதலை கிடைக்குமாக இருந்தால், தனது சாவு இந்த விடுதலைப் போராட்டத்தை உந்தி முன்தள்ளுமாக இருந்தால் அந்தச் சாவை அணைத்துக் கொள்ள எமது போராளிகள் போட்டியிடுவார்கள்.

தமிழீழ தேசியத்தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 29-08-2004
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948

# புலிகளிடம் பேச எதுவுமில்லை!

சமாதானப் பேச்சுவார்த்தைகள் குறித்து விடுதலைப்புலி களுடன் கோருவதற்கோ பேசுவதற்கோ இனி எதுவுமே இல்லை. கோரவேண்டியதும், பேசவேண்டியதும், பெறப்பட வேண்டி யதும் அரசாங்கத்திடமே உள்ளன.

விடுதலைப்புலிகள் இயக்கம் யுத்த நிறுத்த உடன்பாடு கைச்சாத்திட்ட காலத்தில் இருந்து யுத்தநிறுத்தத்தைப் பேணுதல் நோர்வே மத்தியஸ்தத்துடன் பேச்சுக்களை நடத்துதல், இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையை உருவாக்குதல் போன்ற விடயங்களில் உறுதியாகவே உள்ளது.

அதாவது சிறிலங்கா ஆட்சியாளர்களின் நிலைப்பாடுகள் மாறிய போதோ ஆட்சியாளர்கள் மாறியபோதோ, அன்றி விடுதலைப்புலிகள் இயக்கத்தில் கருணா ஏற்படுத்திய சிறு குழப்பத்தின் போதோ புலிகள் இயக்கம் தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளவில்லை. தனது நிலைப்பாட்டில் உறுதியாகவே இருந்தது.

ஆனால் சிறிலங்கா தரப்பில் அத்தகையதொரு நிலைப்பாடு இருக்கவில்லை ஐ.தே.முன்னணி அரசாங்கம் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு ஓரளவு முன்னுரிமை கொடுத்து பேச்சுக்களை ஆரம்பிக்க முன்வந்ததாகவும் ஆட்சிக் கவிழ்ப்பு அதையடுத்து நிகழ்ந்த ஆட்சி மாற்றம் என்பன சமாதானப் பேச்சுவார்த்தை யுத்த நிறுத்தம் என்பன தொடர்பான கேள்விகளை எழுப்பியுள்ளன.

ஆட்சி மாற்றம் ஏற்பட்டதிலிருந்து சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீளவும் ஆரம்பிக்கப்படுமா என்ற கேள்வி எழத்தொடங்கியது இதற்குப்பல காரணங்கள் இருக்கவே செய்தன. இதில் அடிப்படையாக புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்துதல் என்பது தொடர்பாக கூட்டணிக்குள் காணப்பட்ட முரண்பாடு முக்கியமானதாகும் அதாவது ஆட்சியில் முக்கிய பங்காளியாக ஜே.வி.பி புலிகளுடன் பேசுவதை ஆதரிக்கவில்லை.

ஆகையினால், சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுமா? இல்லையா? என்பது குறித்த கேள்விகள் பலமாகவே இருந்தது. ஆளும் தரப்பில் இன்றும் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு தொடர்பாக முரண்பாடுகள் நிரம்பவே உண்டு. இது குறித்த இறுதித்தீர்மானம் பெறப்படவேண்டியதாகவே உள்ளது.

அடுத்ததாக பேச்சுவார்த்தைக்குவரினும் நோர்வேயின் மத்தியஸ்தத்துடன் பேச்சுக்களை நடத்த தயாராகவுள்ளனரா? என்பது குறித்தும் கேள்வியுண்டு ஏனெனில் ஆரம்பம் முதலே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினரில் ஒரு தரப்பினர் நோர்வேயின் மத்தியஸதத்தை கடுமையாக எதிர்ப்பதோடு இந்தியாவின் தலையீட்டையும் கோரி நிற்கின்றனர்.

அடுத்ததாக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் மீதும் புதிய ஆட்சியாளர்களில் இத்தரப்பினர் காட்டமான விமர்சனங்களை தெரிவித்து வருவதோடு ஸ்கன்டிநேவிய கண்காணிப்புக்குழுவினர் வெளியேற்றப்பட வேண்டும் எனவும் கோரி வருகின்றனர். அத்தோடு கண்காணிப்பு நடவடிக்கைகளில் இந்தியாவை ஈடுபடுத்தவேண்டும் எனவும் இத்தரப்பினர் வலியுறுத்தி வருகின்றனர்.

இதற்கும் அப்பால் யுத்தத்தினால் பாதிப்புற்றுள்ள வடக்கு கிழக்கு மக்களுக்கான நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கான இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை குறித்து பேச்சுவார்த்தைகள் நடத்த அரசாங்கத்தரப்பு தயாராக இருப்பதாக இல்லை இதற்கான மாற்றுத்திட்டமொன்று முன்வைக்கும் முயற்சியிலேயே அரசாங்கம் இறங்கியுள்ளது. ஆனால் மாற்றுத்திட்டங்கள் எதையும் புலிகள் ஏற்கவோ, பரிசீலிக்கவோ தயாராக இல்லை.

ஆகையினால் தற்பொழுது விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு குறித்து எவரும் பேச்சுக்களை நடத்துவதென்பது அவசியமற்றதொன்று ஏனெனில் புலிகள் தெளிவாகவும், உறுதியாகவும் உள்ளனர் மாறாக அரசாங்கத்துடனேயே பேச்சுக்களை நடாத்தலும் முடிவிற்கு வருதலும் வேண்டும். அதாவது சமாதானமா? யுத்தமா? என்பதில் இருந்து இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை மற்றும் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு என்பன வரை அரசாங்கத்திடமே பேசி முடிவிற்கு வரவேண்டும். ஏனெனில் அங்குதான் குழப்பமும் உள்ளது. தீர்க்க முடியாத முரண்பாடுகளும் உள்ளன.

# இந்த அரசு பதவிக்கு வந்த பின் நடந்த கொலைகளுக்கு ஏன்நடவடிக்கை எடுக்கவில்லை

## ஜாதிக ஹெல உறுமய பா.உ. அத்துரலிய ரத்னதேரர் கேள்வி

ம.ஐ.சு.மு அரசாங்கம் ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் யானை புலி ஒப்பந்தமொன்று உள்ளது இந்த நாட்டைப் பாதுகாக்க வேண்டுமெனக் கூறினாரகள். இதனால் தான் பாராளுமன்றத்தைக் கலைத்து நாட்டை பொறுப்பேற்பதாகக் கூறினர். அப்படியாயின் இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் எத்தனை பேர் கொலை செய்யப்பட்டுள்ளனர். இதற்கு ஏன் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என ஜாதிக ஹெல உறுமய பா.உ அத்து ரலிய ரத்ன தேரர் கேள்வி எழுப்பியுள்ளார் இந்தச் சந்தர்ப்பத்தில் மௌனம் சாதிப்பதோ அல்லது அறிக்கைகளை வெளி யிடுவதோ அல்லது கண்டனம் தெரிவிப்பதோ சுவரொட்டிகள் மூலம் இச் சம்பவத்தைக் கண்டிப்பதோ போதுமானதாக அமையாது எனவும் அவர் கூறினார்

# இராணுவத்திற்கு தகவல்வழங்குவோரை பாதுகாப்பது இராணுவத்தின் கடமை

## அமைச்சுச் செயலாளர் திலக் ரணவிராஜா

இராணுவத்திற்கு தகவல் வழங்கி வருபவர்களை பாதுகாப்பது இராணுவத்தின் கடமையென மக்கள் பாதுகாப்புச் சட்டம் மற்றும் சமாதானம் தொடர்பான அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜா தெரிவித்துள்ளார்.

இராணுவத்திற்கு தகவல் வழங்கி வந்த மற்றுமொருவர் நேற்று கொழும்பில் சுட்டுக்கொலை செய்யப்பட்ட சம்பவம்தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அவர் தொடர்ந்து கூறுகையில், கொலை செய்யப்பட்டவர் வெளியே இருந்து இராணுவத்திற்கு தகவல் களை கொடுத்து வந்தவர் என தகவல்கள் கிடைத்துள்ளன. ஒரு கட்சியினருக்குள் உள்ளவர்களை கொலை செய்கின்ற நடவடிக்கையுள்ளதாக குறிப்பாக ஏனைய தமிழ் அரசியல் கட்சியினைச் சேர்ந்த பிரதிநிதிகளை கொலை செய்வதாகத் தெரிகின்றது. புலனாய்வுப் பிரிவினரை படுகொலை செய்வது தொடர்பாக அவர்களை பாதுகாக்கும் பொறுப்பு இராணுவத்தினருக்கே உள்ளது எனவும் ஒரு சிலபிரிவினரிடமிருந்து தகவல்களைப் பெறுவதாயின் அந்தப் பிரிவினரைப் பாதுகாக்கும் பொறுப்பும் இருக்கின்றது என்றும் அவர் கூறினார்.

# ஹபரணையில் வீதிவிபத்தில் திருமலையைச் சேர்ந்த இருவர்பலி

(கொழும்பு)

ஹபரணை கிரிவடுவ பிரதேசத்தில் இடம்பெற்ற வாகனவிபத்தில் இருவர் கொல்லப்பட்டனர் இவர்கள் திருகோணமலையைச் சேர்ந்தவர்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது பி ஆனந்தன் என்ற பெண்ணும் பழனியப்பன் என்ற ஆணுமே பலியானவர்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது. பேருந்து ஒன்றும் சிற்றூர்தி ஒன்றும் மோதிக் கொண்ட போதேஇந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது காயமடைந்த 6 பேர் யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர்களாவர் இவர்கள் கிண்ணியாப் பிரதேசத்துக்குத் சிற்றூர்தி ஒன்றில் சென்று கொண்டிருந்த போதேஇந்த சம்பவம இடம்பெற்றுள்ளது. இவாகள் அனுராதபுர வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனா் (32)

# லண்டனில் தமிழ் இளைஞர் சிற்றூர்தியில் வைத்து சுட்டுக்கொலை

லண்டன் மாநகரில் நேற்று முன்தினம் இலங்கைத் தமிழ் இளைஞர் ஒருவர் சுட்டு கொல்லப் பட்டார். மொட்ட ரூபேஸ் என அழைக்கப்படும் இவர் சிற்றூர்த்தி ஒன்றில் இருந்த போதே சுட்டுக் கொல்லப்பட்டார்.இவர் அண்மையிலேயே குற்றம் ஒன்றுக்காக சிறைச்சாலைக்கு சென்று வந்தவராவார்.

லண்டனில் இயங்கும் தமிழ் குழுக்களிடையே ஏற்பட்டுள்ள முறுகலின் அடிப்படையிலேயே இந்த கொலையும் இடம்பெற்றுள்ளதாக லண்டன் செய்திகள் கூறுகின்றன.

கடந்த ஜூலை 8ஆம் திகதி 70 ஆயிரம் பவுண் செலவில் இலங்கைத் தமிழ் இளைஞர் குழுக்களுக்கு எதிராக மேற்கொண்ட 'ஒப்பரேசன் என்ட் பவர்' சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதையடுத்து இடம்பெற்ற முதலாவது கொலைச் சம்பவம் இதுவாகும்,

இதேவேளை தற்சமயம் இடம்பெற்று வரும் கடன் அட்டை முறைகேடுகள் தொடர்பில் இலங்கைத் தமிழ் இளைஞர்களுடன் லண்டனில் வசிக்கும் இலங்கையின் வர்த்தகர்களும் ஈடுபட்டிருப்பதாக

லண்டன் காவல்துறையினர் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். அண்மையில் இவ்வாறான குற்றச்சாட்டின் பேரில் இலங்கைத் தமிழ் வர்த்தகர் ஒருவர் கைது செய்யப்பட்டு அவருக்கு காலில் கண்காணிப்பு பட்டியை காவல்துறையினர் கட்டியுள்ளனர். (32)

# இல்மனைட் தொழிற்சாலையை மீண்டும் இயங்கவைக்க முயற்சி

(திருகோணமலை)

திருகோணமலை புல்மோட்டை பகுதியில் அமைந்துள்ள இல்மனைட் தொழிற்சாலையை மீள இயங்க வைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த 16 வருடங்களாக மூடப்பட்டிருந்த இந்த தொழிற்சாலையின் மீள் கட்டுமானப் பணிகள் அமைச்சர் அதாவுல்லவின் கீழ் செயற்படும் கிழக்கு மாகாண உட்கட்டமைப்பு அமைச்சினால் முன்னெடுக்கப்படுவதாகத் தெரியவந்துள்ளது.

உலகின் மிகப்பெரிய டைட்டேனிய மூலவளங்களைக் கொண்ட பகுதியாக புல்மோட்டை இனம் காணப்பட்டுள்ளது. இல்மனைட்டை கொண்டு தயாரிக்கப்படும் டைட்டேனியம் உலகின் முக்கியமான பல உற்பத்திப் பொருட்களின் தயாரிப்புக்குப் பயன்படுத்தப்படும் மூலப்பொருள் என்பது குறிப்பிடத்தக்கது. (32)

# யாழ்.மாவட்ட மருத்துவர் சங்க வருடாந்த மாநாடு நேற்று

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட மருத்துவர் சங்கத்தின் வருடாந்த மாநாட்டின் இரண்டாவது நாள் நிகழ்வுகள் நேற்று மாலை 4 மணியளவில் யாழ் பல்கலைக் கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் யாழ் மாவட்ட மருத்துவ சங்கத் தலைவர் டாக்டர் எஸ். ஜெயரட்ணம் தலை மையில் இடம் பெற்றது. இந்நிகழ்வின் முதல் நிகழ்வாக பொதுச் சுடரினை மகரகம புற்றுநோய் மருத்துவ ஆலோசகர் டாக்டர் பலவர்தன யாழ். பல்கலைக்கழக வேந்தர் பேராசியர் ஜெயசூரிய, மகரகம புற்று நோய் அறுவைச் சிகிச்சை டாக்டர் இந்திராணி அமரசிங்க, டாக்டர் ஜெயரட்ணம், டாக்டர் கணேசமூர்த்தி ஆகியோர் ஏற்றி வைத்தனார். அதனைத் தொடர்ந்து மருத்துவ பீட மாணவியர் வாழ்த்துப் பாடல் இடம் பெற்றது அதனைத் தொடர்ந்து புற்று நோய் மருத்துவ ஆலோசகர் டாக்டர் பலவர்தன புற்றுநோய் தொடர்பாக விளக்கமளித்தார். இந்நிகழ்வில் மருத்துவ பீட மாணவர்களின் நாடகம் இசை நிகழ்வுகள் என்பன இடம் பெற்றன. இந்நிகழ்வில் ஏராளமானோர் கலந்து கொண்டனர். (36)

# பண்டாரவன்னியனின் வீரத்தோற்றத்தை உலகிற்கு எடுத்துக்காட்டிய வரதராசா

## மறைந்த ஓவியர் குறித்து இளங்குமரன்

பண்டார வன்னியனின் வீரத் தோற்றத்தை உலகிற்கு எடுத்துக் காட்டிய ஓவியர் சி.வரதராசா அவர்களின் மறைவு கல்விச் சமூ கத்திற்கு பெரும் இழப்பாக அமைந் துள்ளது.

இவ்வாறு 25-08-2004ஆம் நாள் பண்டாரவன்னியனின் 201ஆம் ஆண்டு வெற்றி நாளில் தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் இளங் குமரனவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

அவர் இவ் ஓவியரின் சிறப்புப் பற்றி தொடர்ந்து உரையாற்றுகை யில் மாவீரன் பண்டாரவன்னிய னின் வீரத்தை, ஆற்றலை அறிந் தவர்கள் கூட அவரது தோற் றத்தை அறிந்திருக்கவில்லை. அந்த குறையை நீக்க வாளோடும் கொடி யோடும் எடுப்பான தோற்றத்தோடு வரைந்து எமக்கெல்லாம் இவன் தான் பண்டார வன்னியன் என அறிமுகப்படுத்துமளவுக்கு அவ்வுரு வப்படத்தினை வரைந்தவரும் பெரும் ஓவியருமான முன்னாள் வவுனியா வடக்குக் கோட்டக் கல்விப்பணிப்பாளரின் மறைவு கல்விச் சமூகத்திற்கு ஏற்பட்ட பேரிழப்பாகவும் அமைந்துள்ளது. இவர் வழமை போல பண்டார வன்னியனின் வெற்றி விழாவில் கலந்து கொள்வாரென எதிர்பார்த் திருந்த எமக்கு இந் நாளிலேயே இவர் சாவடைந்தது எமக்கு பெரும் வேதனையாக இருப்பதோடு பண்டார வன்னியனின் படத்தை எமக்குத் தந்து தானும் படமாகி விட்டார் இது கல்விச் சமூகத்திற்கு ஏற்பட்ட பெரும் இழப்பாகும் என சி.வரதராசாவின் சாவுச்சம்பவம் பற்றி அவர் குறிப்பிட்டுள்ளார்.(ச.தீ)

# 'இருள் இனி விலகும்' நூல் நேற்று சிறப்புற வெளியீடு

(அலுவலக செய்தியாளர்)

போராளியும் இலக்கியப் படைப்பாளியுமான தமிழ்க்கவி அவர்களின் "இருள் இனி விலகும்" எனும் போரியலை சித்திரிக்கும் இலக்கிய நாவல் நேற்று வெளியிடப்பட்டது.




மிகவும் நெருக்கடியான சூழ்நிலையில் யாழ்ப்பாணப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் தமிழ் மக்கள் மீதும் தமிழ்ப் பெண்கள் மீதும புரிந்து வந்த கெடுபிடிகளிலிருந்து விடுவிக்கும் நோக்கில்அங்கு சென்று இராணுவத்தினரைத் தாக்கி அச்சுறுத்தல் ஏற்படுத்தி பல்வேறு சம்ப வங்களில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட பெண் போராளிகளின் வீரசாதனைகளையும் அவர்களின் தியாகத்தையும் எடுத்துக்காட்டும் வகையில் போராளி தமிழ்க்கவி அவர்களினால் உருவாக்கப்பட்ட இருள் இனி விலகும் என்ற நூல் நேற்று பிற்பகல் 4.00 மணியளவில் கிளிநொச்சியில் அமைந்துள்ள பண்பாட்டு மண்டபத்தில் வெளியிடப்பட்டது. இந் நிகழ்வினை ஆரம்பிக்கும் முகமாக தமிழீழத் தேசியக் கொடியினை செஞ்சோலைப் பொறுப்பாளர் ஜனனி அவர்கள் ஏற்றிவைக்க நிகழ்விற்கு தமிழீழ மாவீரர் பணிமனைப்பொறுப்பாளர் பொன் தியாகம் அவர்கள் தலைமை தாங்கினார். நூலினை கேணல் விதுசா அவர்கள் வெளியிட்டுவைக்க, கேணல் சங்கர் அவர்களின் துணைவியாரான குகா அவர்கள் பெற்றுக்கொண்டார். தொடர்ந்து நூலின் மதிப்பீட்டுரையினை ஊடகவியலாளர் சாந்தன் அவர்கள் நிகழ்த்த, ஆய்வுரையினை போராளி மலைமகள் நிகழ்த்தினார். தொடர்ந்து சிறப்புரையினை யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி அவர்கள் நிகழ்த்த, பதிலுரையினையும் நன்றியுரையினையும் போராளியும் இலக்கியப் படைப்பாளியுமான தமிழ்க்கவி அவர்கள் நிகழ்த்தினார். மிகச் சிறப்பாக நடைபெற்ற இவ் வெளியீட்டு விழாவில் போராளிகள், இலக்கியப் படைப்பாளிகள், பொதுமக்கள் இலக்கிய ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (ச,தீ)

## புதுக்குடியிருப்பில்..

புதுக்குடியிருப்பு மாவீரர் படிப் பகத்தின் முன்பாக உள்ள ஒழுங் கையிலிருந்து வீதியில் ஏறிய உழவு இயந்திரம் மோதியது இதனா லேயே அக் 'கைஏஸ்' வாகனம் குடை சாய்ந்து பெரும்சேதங்களுக்கு உள்ளானது. இதில் பயணித்தவர் கள் காயம் எதுவுமின்றி தப்பிக் கொண்டனர். (08)

## ஊர்திகளைப்...

சோதனை நிலையத்திற்குச் செல்லும் போது நடப்பு ஆண்டிற் கான வரி அட்டையினை எடுத்துச் செல்ல வேண்டுமென மோட்டார் ஊர்திப் பதிவுப்பகுதி போக்குவரத் துக் கண்காணிப்புப் பிரிவினர் தெரி வித்துள்ளனர். (சோ.கு)

## கட-----

கிறிஸ்தவ மதப்பெரியார்கள் மற்றும் பொதுமக்களென நூற் றுக்கு மேற்பட்டோர் கலந்து கொண்ட இப்பேரணி மனித உரி மைகள் ஆணைக்குழுவின் யாழ் அலுவலக முன்றலில் முடிவ டைந்தது.

இங்கு கையளிக்கப்பட்ட மகஜ ரின் பிரதிகள் சனாதிபதி, பிரதமர், நோர்வே சமாதானக்குழு சகல கட்சித் தலைவர்கள், சகல நாட்டுத் தூதுவர்கள் மற்றும் அனைத்து உலக மனித உரிமைப் பிரகடன அமைப்பு ஆகியவற்றிற்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அமைப் பாளர்கள் தரப்பில் தெரிவிக்கப் பட்டது.

"கட்டாய மதமாற்றம்" இலங் கையில் இல்லாதபோது ஹெல உறுமய இந்தச்சட்டத்தைக்கொண்டு வருவதன் மூலம் மேலதிக பாராளு மன்ற ஆசனங்களைக் கைப்பற்றும் அரசியல் இலாபம் தேடுவதில் ஈடு பட்டுள்ளது. அப்போதைய இலங் கையின் ஆட்சியைக்கைப்பற்றும் படியாக சிறுபான்மையினருக் கெதிராகப் பெரும்பான்மையினரை ஏவிவிட்டமையே மாபெரும் யுத்தம நடக்கக்காரணம். 1957 ஆம் ஆண்டு சிங்கள அரச மொழியைச் சட்டத் தால் அமுல்படுத்தியதால் தமிழ் பாஷைக்கு அநீதி நேர்ந்தது. அதற்குக் கிடைத்த பதில்தான் இப் போதைய யுத்தம்.

இதனால் இலங்கை அரசாங்கத் திற்கும் சகல அரசியல்கட்சிகளுக் கும் இதுபோன்ற சமுதாயத்தை பேதைப்படுத்தும் யோசனைகளுக் கும் பாராளுமன்றில் ஆதரவாக இருக்காதிருக்கும் படி இவ்விண் ணப்பத்தினூடாக பொதுமக்களை யும் கேட்டுக்கொள்கின்றோம். அதேபோல் இதுகுறித்து நல்ல தீர்மானம் எடுக்கும்படி அரசாங்கத் திற்கோ, சகல கட்சிகளுக்குமோ வற்புறுத்தும்படியும் கேட்டுக்கொள் கின்றோம். இதேவேளையில் சிறுமதங்களை ஹெல உறுமய வின் பௌத்த குருமாரினால் பாது காப்பை உடன்உறுதி செய்யும்படி நாங்கள் சகல நாடுகளிலும் அத் தோடு அமைப்புக்களிடமும் கேட்டுக கொள்கின்றோம் என்றுள்ளது. (27,33)

## எதென்ஸ் ஒலிம்பிக் - 2004 பதக்கப்பட்டியல்

| நாடுகள் | தங்கம் | வெள்ளி | வெங்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐக்கிய அமெரிக்கா | 32 | 37 | 27 | 96 |
| ரஷ்யா | 21 | 24 | 33 | 78 |
| சீனா | 29 | 17 | 13 | 59 |
| அவுஸ்திரேலியா | 17 | 14 | 16 | 47 |
| ஜேர்மனி | 14 | 15 | 18 | 47 |
| ஜப்பான் | 15 | 10 | 11 | 36 |
| பிரான்ஸ் | 11 | 08 | 12 | 31 |
| இத்தாலி | 09 | 09 | 11 | 29 |
| தென்கொரியா | 08 | 11 | 09 | 28 |
| பிரிட்டன் | 08 | 08 | 12 | 28 |
| நெதர்லாந்து | 04 | 09 | 09 | 22 |
| உக்ரேன் | 09 | 04 | 08 | 21 |
| ருமேனியா | 08 | 05 | 06 | 19 |
| கயூவா | 04 | 06 | 09 | 19 |
| ஸ்பெயின் | 03 | 11 | 05 | 19 |
| ஹங்கேரி | 08 | 07 | 03 | 18 |
| கிரீஸ் | 06 | 05 | 04 | 15 |
| பெலாரஸ் | 02 | 03 | 08 | 13 |
| கனடா | 03 | 06 | 03 | 12 |
| பல்கேரியா | 02 | 01 | 09 | 12 |
| போலந்து | 03 | 02 | 05 | 10 |
| பிறேசில் | 03 | 03 | 02 | 08 |
| துருக்கி | 03 | 02 | 03 | 08 |
| செக்குடியரசு | 01 | 03 | 04 | 08 |
| சுவீடன் | 04 | 01 | 02 | 07 |
| தாய்லாந்து | 03 | 00 | 04 | 07 |
| ஆஸ்திரியா | 02 | 04 | 01 | 07 |
| எதியோப்பியா | 02 | 03 | 02 | 07 |
| கென்யா | 01 | 04 | 02 | 07 |
| டென்மார்க் | 01 | 00 | 06 | 07 |
| சிலோவாக்கியா | 02 | 02 | 02 | 06 |
| நோர்வே | 04 | 00 | 01 | 05 |
| நியூசிலாந்து | 03 | 02 | 00 | 05 |
| தாய்வான் | 02 | 02 | 01 | 05 |
| தென்னாபிரிக்கா | 01 | 02 | 02 | 05 |
| சுவிற்சர்லாந்து | 01 | 01 | 03 | 05 |
| ஆர்ஜன்டீனா | 01 | 00 | 04 | 05 |

## வீரச்சாவு...

அரசடித்தீவு கொக்கட்டிச் சோலை, மட்டக்களப்பு) என்ற போராளியே வீரச்சாவடைந்தவராவார். இவருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

## சுயாதீன...

சனாதிபதியின் அனுமதி இன்றி சுயாதீன தேர்தல் ஆணைக் குழு விற்கான நியமனங் கள் அங்கீகரிக் கப்படாது என்பதை தேர்தல் ஆணையாளரின் கவனத்திற்கு கொண்டவந்துள்ள சபாநா யகர் சனாதிபதியின் தாமதமே இதற்குக் காரணம் என்றும் சுட்டிக் காட்டி யுள்ளார். (32)

## தமிழர்களுக்கு..

புலிகள் முன்னெடுக்க வேண்டு மெனவும் அவர் கேட்டுக்கொண்டுள் ளார். இதனிடையே கிழக்கிலங்கை யில் அண்மைக்காலமாக இடம் பெற்று வரும் அசம்பாவிதங்கள் தமக்கு கவலை அளிப்பதாக உள்ளதாகத் தெரிவித்த ஆயர் அங்கு இடம் பெறும் வன்முறைச் சம்பவங்கள் பற்றி நேரில் அறிந்திருக்கவில்லை யெனவும் கூறினார். ஆயினும் ஊட கங்கள் வழியிலாக அங்கு நடப்பவை தொடர்பாக வெளிவருகின்ற செய்தி கள் சமாதான நடவடிக்கை தொடர் பாக அச்சஉணர்வை ஏற் படுத்துவ தாகவும் அவர் தெரிவித்தார். (27)

## சாவு அறிவித்தல்



### இராசேந்திரம் வரதராசா

முள்ளியவளையைச் சேர்ந்தவரும், முன்னாள் வவுனியா வடக்கு கோட்டக்கல்வி அதிகாரியுமான இராசேந்திரம் வரதராசா காலமானார். அன்னார் இராசேந்திரம் பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும், புஸ்பமலரின் அன்புக்கணவரும், நந்தகுமார் (ஜேர்மனி), கல்யாணி (வாணி), தமிழ்ப்பரிதி (போராளி), குகாஜினி ஆகியோரின் அன்புத் தந்தையும், விஜிதாதேவி (ஜேர்மனி), மணிமாறன் (போராளி) ஆகியோரின் அன்பு மாமனும், இளவரசி, கலையரசி, வினோஸ், அபிசேகன் ஆகியோரின் அன்புப்பேரனும், இரத்தினத்தின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 29.08.2004 ஞாயிறு பகல் 12.00 மணியளவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், போராளிகள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:-
மகன் தமிழ்ப்பரிதி,
(செந்தூரன்)

முள்ளியவளை. (5009)

## சாவு அறிவித்தல்



### திருமதி சபாரத்தினம்தனலட்சுமி

புங்குடுதீவு இரண்டாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் குமுழமுனை முழங்காவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சபாரத்தினம் தனலட்சுமி அவர்கள் 28.08.2004 அன்று காலமானார் இவர் சபாரத்தினம் அவர்களின் மனைவியும், குசேலகுமாரி, விஜயகுமாரி, மதியழகன், சரஸ்வதி, நந்தகுமார் ஆகியோரின் தாயாரும். சறோஜினிதேவி, தட்சனாமூர்த்தி ஆகியோரின் சகோதரியும். பத்மநாதன், ஆனந்தராசா (சீனித்துரை) பகீரதன், பிரிந்த, லலிதா ஆகியோரின் மாமியாரும் ஆவார் அன்னாரின் இறுதிக்கிரியைகள் பின்னர் அறிவிக்கப்படும்.

முகவரி:-
விஜிவீதி, முழங்காவில்,
பூநகரி. (5013)

தகவல்:-
சபாரத்தினம்,
நந்தகுமார்
(மகன்)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 29 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.